உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௩௯.] சித்திரபானு-௵ ஆனி௴ [பகுதி—௮.

Vol. 39. June—July 1942. No. 8.

உள்ளுறை.

சில நினைவுக் குறிப்புக்கள்:-	ஸ்ரீ. ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G B.V.C.	௩௬௧—௩௭௨
வங்கியம்:—	ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர்	௩௭௩—௩௭௬
கம்பராமாயண சாரம்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.	௩௭௭—௩௯௪
பிற்குறிப்புக்குப் பிற்குறிப்பு:—	ஷை	௩௯௫—௩௯௬
இரங்கற்பாக்கள்:—	சு. நவநீதகிருஷ்ணபாரதி	௩௯௭—௪௦௦
இராமசேயம்:— (உத்தரகாதை)	T. K. இராமாநுஜையங்கார், உதவியாசிரியர்	௪௦௧—௪௧௦
ஒரு சிறப்புப்பட்டம்:—	பத்திராசிரியர்	௪௧௧—௪௧௨
மதிப்புரை:—		௪௧௩—௪௧௬

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1942.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	*யாப்பருங்கலக்காரிகை			
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
7.	*தோத்திரத்திரட்டு			
8.	*தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	*ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
9.	*அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—௩௯.] சித்திரபானு-ஹு ஆனி மீ [பகுதி—அ.
Vol. 39. June—July 1942. No. 8.

மகாமகோபாத்தியாய டாக்டரவர்கள்

சில நினைவுக் குறிப்புக்கள்

[ராவ்ஸாகிப் ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

திருத்தக்க தேவர்சிந் தாமணியும் கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்;—உருத்தகு
கொங்குவேள் மாக்கதையும் கூற்றேம்; குறள் அணுகேம்:
எங்கேழிலென் ஞாயி றேமக்கு

டாக்டர் ஐயரவர்களது எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாக் காலத்தில் அவர்கள் நினைவுக்குறிப்புக்களாக யான் எழுதியது, முதலில் 'கலைமக'ளிலும் பின்பு அவர்களது எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாநினைவுமலரிலும் வெளியாயிருக்கிறது. அந்த நினைவுக் குறிப்புக்களில் அடங்காத சில நிகழ்ச்சிகளை இங்கே தருகின்றேன்.

மிருகவைத்திய இலாகாவில் நான் வகித்திருந்த உத்தியோகத்தின் வேலைத்தலம், சென்னைமாகாணச் சில்லாக்களெல்லாமுமே யென்று ஐயரவர்களுக்கு யான் தெரிவிக்கும்படி நேர்ந்தபோது, அவர்கள், ஒரு சீட்டில் சில அரிய பழைய தமிழ்நூல்களின்பெயர்களையெழுதி யென்கையிற் கொடுத்துத் 'தாங்கள் தமிழ்ச்சில்லாக்களில் பிரயாணஞ்செய்யுங்காலங்களில் இந்தச் சீட்டிற்குறித்த ஏடுகளைப்பற்றி விசாரித்து அகப்பட்டவைகளை யெனக்கனுப்பினால், பேருதவியாயிருக்கும் என்று சொன்னார்கள். அவர்கள்

கொடுத்த குறிப்பில் முதலாவதாகக் குறித்திருந்தது, கொங்குவேள் மாக்கதை.* அவர்கள், கொங்குவேள்மாக்கதையென்பதும் பெருங் கதையென்பதும் ஒருநூலே என்றும், அதில் ஓரே ஒரு ஏட்டுச் சுவடிதான் கிடைத்திருக்கிறதென்றும், சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை வளையாபதி குண்டலகேசியென்ற பஞ்சகாவியங்க ளுள் வளையாபதி குண்டலகேசியென்ற இரண்டுநூல்களின் ஏடுகள் எங்கும் தேடியும் கிடைக்கவில்லையென்றும், அவை யிறந்து போயினபோலுமென்றும், கொங்குவேள்மாக்கதை (பெருங்கதை) யென ஒருநூலுண்டென்பதை வித்துவான்களுள்ளேயே அநேகர் அறியார்களென்றும் சொன்னார்கள்.

---

* கொங்குவேள்மாக்கதை, இக் கட்டுரைத்தொடக்கத்திலுள்ள வெண் பாவிற் குறித்த நான்குநூல்களுள் ஒன்று. இந்த நான்குநூல்களே, தமிழிலக்கியங்களுள்ளே, முதன்மைச் சிறப்புடையவையென ஆன்றோரால் மதிக்கப்பெற்றவை. சிறந்த கவிஞர்களுள்ளே ஒருவரும் தேசியகவிசிரேட்டருமான சுப்பிரமணியபாரதியாரவர்கள் தமிழ் மொழியைப் பாராட்டுகின்ற, 'செந்தமிழ்நாடெனும்போதினிலே' யென்று தொடங்கும் கீதங்களிலே, மேலே விதந்துகூறிய நான்கு இலக்கியங் களிற் சிந்தாமணியையும் கொங்குவேள்மாக்கதையையும் சேராமல் விட்டுச் சிலப்பதிகாரத்தைப் புதிதாகச்சேர்த்திருப்பதை யான் தெரிந்தபோது, கொங்குவேள்மாக்கதையைப்பற்றிப் பாரதியார் தெரியாதிருந்திருக்கலா மென்றும், எளியநடையை மிகப் பெரும்பான்மையாகக் கையாண்ட அவர், சிலப்பதிகாரத்திலும் சிந்தாமணி கடினமான நடையுடையதென்றுகருதி, பின்னையதை விலக்கி முன்னையதைச் சேர்த்திருக்கலாமென்றும், கம்ப ராமாயணநடை, சிலப்பதிகாரநடையைநோக்கக் கடினமானதாயினும், அந்தக் காவியம் அதிபிரபலமானதாதலால், அதை விலக்காதிருந்தாரென் றும் எண்ணினேன். பின்பு, அவரோடு மிக நெருங்கிப்பழகிய சில வித்துவ நண்பரோடு உரையாடிய சமயங்களில் அவரும் அவரைத் தலைவராகக் கொண்ட இலக்கியவிற்பன்னர் சிலரும் கம்பராமாயணத்தினும் சிலப்பதி காரம் சிறந்த காவியமென்ற அபிப்பிராயமுடையாரென்பதைத் தெரிய லானேன். சிலப்பதிகாரத்தில் உள்ள வரிப்பாட்டுக்கள் அந்நூலின் மற்றப் பகுதிகளுக்கு மிகமிக மேலானவையென்றும், அவைகளை நீக்கிவிட்டால், அந்நூல் சாதாரணநூலாய்விடுமென்றும், அந்த வரிப்பாட்டுக்கள் அந்நூ லாசிரியரால் இயற்றப்படாதனவாய் எடுத்தாளப்பட்டனவாகத் தோன்று கின்றனவென்றும் சொல்வாருளர்.

டாக்டரவர்கள் குறித்துக்கொடுத்த நூல்களைப்பற்றி யான் விசாரித்துவந்தபோது, பாளையங்கோட்டைவாசியும் இரட்சணிய யாத்திரிக காவிய கிரந்தகர்த்தாவுமான கிருஷ்ணபிள்ளையவர்கள், 'வளையாபதி'யேட்டைச் சீவைகுண்டத்துக்குச்சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் (அந்தக் கிராமம் ஆறுமுகமங்கலமென ஞாபகமிருக்கிறது.) தாம் நேரேபார்த்ததாகச் சொன்னார்கள். உடனே, அந்த ஏட்டைத் தருவித்தனுப்புவதினும் டாக்டரவர்களை மகிழ்விப்பது யாதும் இராதென்றெண்ணிச் சீவைகுண்டவாசியும் பிரபலவக்கீலும் அருங்கலைவிநோதரும் என் நண்பருமான சுப்பராயமுதலியாரவர்களுக்கு, அந்த ஏட்டைத் தருவித்து எனக்கனுப்பும்படி ஒரு கடிதமனுப்பினேன். அவர்கள், தக்க வித்துவானொருவரைச் சிபாரிசுக்கடிதத்துடன் அனுப்பி, அவ்வேடிருந்த ஏட்டுப்பெட்டியிலுள்ள ஏடுகளெல்லாவற்றையும் கவனமாகச் சோதித்துப் பார்வையிடச் செய்ததாகவும், அவ்வேடு அகப்படவில்லையென்றும், தெரிவித்தார்கள். அப்போது நான் அடைந்த ஏமாற்றம் இவ்வளவெனக் கூறமுடியாததாயிருந்தது.

பின்பு, டாக்டரவர்களைச் சந்தித்தபோது வளையாபதியேட்டுக்காக நான்செய்தமுயற்சி கைகூடிவிடும் என்பதுபோல நம்பிக்கை தந்து பின் பயன்படாதுபோனதைத் தெரிவித்தேன்.

அவர்கள், "எனக்குக் 'கொங்குவேள்மாக்கதை' யேடுகொடுத்த கவிராசநெல்லையப்பபிள்ளையவர்கள், அந்த ஏட்டைத் திருப்பியனுப்பும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். அந்தநூலுக்கு அவர்கள் கொடுத்த ஏட்டுப்பிரதியொன்றே என்வசம் இருப்பதனால் * அதைச் சரிபார்த்து வெளியிடுதற்கு நீண்டகாலம் வேண்டியிருக்கிறது. கவிராயரவர்கள், அந்த ஏட்டை உடனே அனுப்பிவிடும்படி கண்டிப்பாக எழுத்துமேலெழுத்து விட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னாற் பொறுதிசொல்ல முடியவில்லை. உதட்டுக்குள் உற்ற அமிழ்தத்தை உண்ணாமல் உமிழும்படிநேர்ந்தாற்போல, அருமையாக அகப்பட்ட ஏட்டைப் பதிப்பியாமல் அனுப்பவேண்டியிருக்

* இந்த ஏட்டைப் பார்த்தெழுதிய வேறோரேடு பின்பு கிடைத்ததென்பது, 'பெருங்கதை' முகவுரையிற் கூறப்பட்டிருக்கிறது.

கிறது" என்று வருத்தத்தோடு சொன்னார்கள். நான், 'அந்த ஏட்டைத் திருப்பியனுப்பவேண்டியதில்லை. நான் திருநெல்வேலிக்குப் போகிறேன். கவிராயரவர்களைக்கண்டு வேண்டியதைச்செய்வேன்' என்று சொன்னேன். சொல்லியபடியே, கவிராயரவர்களைக்கண்டு, 'கொங்குவேள்மாக்கதையேடு புத்தகமாகப் பதிப்பாகுமட்டும் அந்த ஏடு இப்போதிருக்கிறபடியே ஐயரவர்களிடமிருப்பதே நல்லது. (அதைத் தங்களைக்காட்டிலும் அவர்கள் அதிகப்பத்திரமாகவைத்திருப்பார்கள்). அந்த ஏடு தங்களிடம் வந்தால், வளையாபதியேடு ஒன்றேயொன்றிருந்தது தவறிப்போனதுபோலத் தவறி ஒருவராலும் வெளியிடப்படாமலும் உலகத்துக்குதவாமலும் இறந்துபோகக்கூடு'மென்று சொன்னேன். கவிராயரவர்கள் என் வேண்டுகோளுக்கு இணங்கினார்கள். அவர்கள், டாக்டரவர்கள் அச்சிட்ட பெருங்கதைப்புத்தகத்தைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சி அளவிலடங்காததாயிருந்ததாகப் பின் நான் அவர்களைக் கண்டபோது என்னிடம் கூறினார்கள்.

இறந்தொழிவனவாயிருந்த பழந்தமிழ்நூல்கள் பல, டாக்டரவர்களால் அச்சேற்றப்பட்டுச் சஞ்சீவிகளாக்கப்பெற்றிருக்கின்றன. அவைகளெல்லாவற்றுக்கும் சில ஏட்டுப்பிரதிகளே இருந்தனவாதலால், அவைகள், அவர்கள் முயற்சியில்லையானால் பெரும்பான்மையாக இறந்திருக்குமானாலும், சிறுபான்மையாகப் பிற சான்றோர்முயற்சியால் உயிர்ப்பித்து நிலைப்பிக்கப்பெற்றிருக்கும். அந்த நூல்களின் ஏட்டுச்சுவடிகள்போலன்றிக் கொங்குவேள்மாக்கதையின் ஏட்டுச்சுவடி ஒன்றேயாக இருந்ததனால், அதன் சாவு ஏனைய எல்லா நூல்களின் சாவிலும் நிச்சயமானதாயிருந்தது. சாகும் நிலைமையிலிருந்த மார்க்கண்டனைச் சாவாது என்றும் வாழும்படி செய்யக்கூடியவரும் செய்தவரும் ஒருவரே. இறக்குந்நிலைமையிலிருந்த கொங்குவேள்மாக்கதையை இறவாமல் என்றும் நின்று நிலவச்செய்யக்கூடியவரும் செய்தவரும் ஒருவரே. முந்திய ஒருவர் சிவபெருமானே. பிந்திய ஒருவர் புலவர்பெருமான் டாக்டர் சாமிநாதையரவர்களே.

உ

வங்கியம்

சுவாமி—விபுலாநந்தர்

விஷு ஆண்டு புரட்டாசிமாதச் 'செந்தமிழ்' வெளியீட்டிலே 'எண்ணலளவை' என்னும் பொருள்பற்றிய உரையினை யெழுதிய பொழுது அவ்வுரையிற் கண்ட முடிபுகள் இசையாராய்ச்சிக்குப் பயன்படுதலை 'இசைக்கிரம'த்துப் பிற்பகுதியிலே காட்டுவாம் எனக் குறிப்பிட்டாம். சென்ற சிலமாதங்களிலே இடமாற்றத்தினாலும் பிற காரணங்களினாலும் எழுதுதற்கு ஓய்வு கிடைத்திலது. எழுதத் தாமதித்தமையினால் ஏற்பட்ட குறையினைச் செந்தமிழன்பர்கள் மன்னிப்பார்களாக.

கணிதமுடிபுகள் நரம்புக்கருவிகளுக்குப் பயன்படுமாறு போலத் துளைக்கருவிகளுக்கும் பயன்படுவ. ஆதலினாலே, 'வங்கியம்' எனவும் வழங்கப்படும் குழற்கருவியினது துளையளவுகளைக் கொண்டு அக்கருவியிலே தோற்றுதற்குரிய இசைச்சுரங்களை அறிந்துகொள்ளலாம். அறிந்துகொள்ளும் வழியினை இவ்வுரையினுட் கூறுவாம்.

முதலிலே சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதையுரையினுள்ளே அடியார்க்குநல்லார்கூறும் துளையளவிலக்கணத்தினை எடுத்துக் கொள்வாம்.

'நீளம் இருபதுவிரல்; சுற்றளவு நாலரைவிரல். இது துளை யிடுமிடத்து நெல்லரிசியில் ஒருபாதி மானிறுத்திக் கடைந்து வெண் கலத்தாலே அணைசுபண்ணி இடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்........இனித் துளையளவிலக்கணம்: அளவு இருபதுவிரல். இதிலே தூம்புமுகத்தின் இரண்டுநீக்கி முதல்வாய் விட்டு இம் முதல்வாய்க்கு எழங்குலம்விட்டு வளைவாயினும் இரண்டு நீக்கி நடுவினின்ற ஒன்பதுவிரலிலும் எட்டுத்துளை யிடப்படும்.

இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்துநீக்கி நின்ற எழினும் ஏழுவிரல்வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப்படும்.'

ஓசையானது நம்மைச் சூழவிருக்கும் பவனத்தினைப் பற்றுக் கோடாகக்கொண்டு பரவுமிடத்து அலைவடிவாகப் பரவுமென்பது மேனாட்டு விஞ்ஞானநூலோர் ஆராய்ந்துகண்ட முடிபு. அலையின் முதல் நடு இறுதி பவனம் அமுக்கமுறும் இடங்கள். காற்கூறும் முக்காற்கூறும் பவனம் அகற்சியுற்று நிற்குமிடங்கள்.

அ ⟶ ஆ ⟶ இ ⟶ ஈ ⟶ உ

மேலே குறித்த ஐந்தெழுத்துக்களும் ஒத்த இடைவெளியின வாக அமைந்துநின்றன. அ இ உ என்னும் குற்றெழுத்துக்கள் பவனம் அமுக்கமுற்றஇடத்தில் நின்றன. ஆ ஈ என்னும் நெட் டெழுத்திரண்டும் பவனம் அகற்சியுற்றஇடத்தில் நின்றன.

இடப்புறத்து முகம் அடைக்கப்பட்டு வலப்புறத்து முகம் திறந்திருக்கும் வங்கியத்திலே திறந்த வலப்புறத்து முகத்திலே பவனம் அகற்சியுற்றுநிற்கும். அடைபட்ட இடப்புறத்து முகத்தி லே பவனம் அமுக்கமுற்றுநிற்கும். அமுக்கத்தை 'அ' என்னும் எழுத்தினுலும் அகற்சியை 'ஆ' என்னும் எழுத்தினுலும் குறிப் பிடும்பொழுது 'அ' அடைபட்ட முகத்திலும் 'ஆ' நாதம்பிறக் கின்ற துளையிலும் நிற்கின்றன. இரண்டிற்குமிடையேயுள்ள இடை வெளியானது இசையலையின் காற்கூற்றின் நீளமாகும். குழலின் முழுநீளம் இருபதுவிரல். வளைவாயினின்று இருவிரல்கள் கழிந்த விடத்திலே முத்திரைத்துளை நின்றது; அதற்கு ஒருவிரல் தாழ முதற்சுரந்தோன்றுந்துளை நின்றது. ஆதலினுலே அடைபட்ட இடப்புறமுகத்திற்கும் முதற்சுரந்தோன்றுந் துளைக்கும் இடை வெளி பதினேழுவிரல் என்பது பெறப்படுகின்றது. இது இசை யலையின் காற்கூறு என மேலே குறிப்பிட்டாம். ஆதலினுலே இசை யலையின் நீளம் ($17 \times 4 = 68$) அறுபத்தெட்டுவிரல்களாகும். ஒரு

விரல் இக்காலத்து ஆங்கிலேய நீட்டலளவையில் முக்கால் இஞ்சு ஆகும். 68 விரல் 51 இஞ்சு ஆகும். ஒருசெக்கண்டு எனப்படும் காலவெல்லையினுள்ளே எத்தனை அலைகள் தோன்றுகின்றனவெனக் கண்டால், அந்த அலைகளைத் தோற்றுவிக்கும் இசைச்சுரம் இது வெனத் துணிதல்கூடும்.

ஓசையினுடைய வேகத்தினை விஞ்ஞானநூலோர் அளந்து அது ஒருசெக்கண்டுக்கு 1081 அடி எனக் கண்டிருக்கிறார்கள். வங்கியத்துளையிலே செக்கண்டு என்னும் காலவெல்லையின் தொடக்கத்திலே வெளிப்போந்த இசையலை 1081 அடிதூரஞ் செல்ல அக்காலவெல்லையின் இறுதியிலே தோன்றிய அலை துளைவா யிடத்திலே நிற்கும். இவ்வெல்லையினுள்ளே எத்தனையலைகள் உள வெனக் காண்பதற்கு 1081 அடியினை, அஃதாவது 12972 இஞ்சினை அலையின் நீளமாகிய 51 இஞ்சினாற் பிரிக்கவேண்டும். இப்படிப் பிரிக்கக் கிடைத்த பேறு 254 (மிச்சம் 18 இஞ்சு). ஆதலினாலே ஒருசெக்கண்டிலே அவ் விசைச்சுரத்திலே 254 அலைகள் தோன்று கின்றன வென்பது முடிபாகிறது. சமன் தானத்திலே நிற்கிற ஷட்ஜத்தின் அசைவெண் 256 என மேனாட்டார் கூறுவர். இவ் வெண்ணுக்கும் நாம் கணித்துக்கண்ட எண்ணிற்கும் வேறுபாடு நூற்றுக்கு ஒருவீதத்திற்கும் குறைவாதலினாலே அவை ஒன்றி நின்றனவெனக் கொள்வோமாதலின் வங்கியத்திற்றோன்றும் முதற் சுரம் சமஷட்ஜம் எனப்பெறும்.

இனி ஏழாவது சுரத்தினைத்தருகிற துளையினை யெடுத்துக் கொள்வாம். தூம்புமுகத்திலிருந்து இருவிரலில் முதல்வாய்நிற்கும். இதிலிருந்து ஏழுவிரல்தூரத்திலே குறித்த ஏழாஞ்சுரத்தின் துளை நிற்கிறது. தூம்புமுகத்திலிருந்து இதன் தூரம் ஒன்பதுவிரல். இது அச்சுரத்தின் இசையலையிற் காற்கூறாதலின் அலையின் முழு நீளம் 36விரல், அஃதாவது 27 இஞ்சு. 12972ஐ 27 இனாற்பிரிக்கக் கிடைப்பது 480 (மிச்சம் 12இஞ்சு). இது சமன்தானத்திலுள்ள

நிஷாதசுரத்தின் அசைவெண். ஷட்ஜமும் நிஷாதமும் இக்காலத்து மேனாட்டு இசைமரபிலுள்ள எண்களைப் பெற்றுவருதலை நோக்கு மிடத்து இருமரபிற்கும் அடிப்படையான தொடர்பு உளதென்பது முடிவாகின்றது.

இனி மேற்குறித்த வங்கியத்தினை அழுத்தமாக ஊதினால், துளையிடத்திலே பவனத்தின் அகற்சியும் அடைபட்டமுகத்திலே அமுக்கமும் அமைவதோடு இடையிலே மற்றோர் அகற்சியும் அமுக்கமும் அமைந்து தோன்றுகின்ற அலையானது அ→ ஆ→ இ→ ஈ என்றபடி அலையின் முக்காற்கூறாகிநிற்கிறது. முதற் சுரத்திலேதோன்றும் அலையின் முக்காற்கூற்றின் நீளம் 17 விரல் ஆகின்றது. ஆதலின் முழு அலையின் நீளம் $22\frac{2}{3}$ விரல். அஃதாவது 17 இஞ்சு. 12972ஐ 17ஆற் பிரிக்கக் கிடைப்பது763. இது முன்பு கிடைத்த அசைவெண்ணின் மும்மடங்கு. முன்புபெற்றதனை 256 எனக் கொண்டமையினாலே இதனை $256 \times 3 = 768$ எனக் கொள்வாம். இது மேற்றானத்துப் பஞ்சமமாகும். இன்னும் அழுத்தமாக ஊதினால் அசைவெண் ஐம்மடங்காகி அதியுச்சகாந்தாரத்தினைத் தரும். ஆதலினாலே குழலோசையிலே ஷட்ஜம் பேசும்போது பஞ்சம காந்தாரங்களும் உடன்றோன்றி இசையினை இனிமைசெய்கின்றன என்னும் உண்மை கணிதத்தின்வாயிலாகப் பெறப்படுகின்றது.

உ

கம்பராமாயணசாரம்

௩சஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

பரதன் கங்கைக்கரையடைதல்

அநுமானுடைய இடக்கையைத் தன் வலக்கையாற் பிடித்த வண்ணமாகப் பரதன், இரவுமுழுதும் வழிநடந்து, சூரியோதயத்திற்குமுன், கங்காநதிக்கரையை அடைந்தான். கிழக்குத் திக்குப் பாலகனுன தேவேந்திரன், தனக்கு அநுகூலமாக இராவண வேட்டையாடி முடித்து வெற்றிவீரனுய் அயோத்திக்குத் திரும்பும் இராமனுக்குச் சூட்டும் பொற்கிரீடத்தின் உச்சியிற் பதிக்கும்படி அளிக்கும் முடிமணி (-சிகாமணி) போலச் சூரியன் உதயமானுன். இப்போது பரதன்செயல் கூறப்பட்டது. இனி, இராமன்செயல் கூறப்படுவதாம்.

குகன் இராமனைக் காணல்

இராம சீதா லக்குமணர், சுக்கிரீவ விபீடணுதியரோடு விருந்தருந்தி மகிழ்ந்திருந்தபோது, தனது பெரிய சேனையோடு குகன் வந்தான். வந்தவன், இராமனைக் கண்ணுங் கருத்துங் களிக்கக் கண்டு, களிப்புக்கண்ணீர் துளிக்கின்றவனுய், விரைந்து வலம்வந்து பாதங்களில் விழுந்து பணிந்தான். இராமன், அவனை வாரியெடுத்து மார்போடணைத்துத் தழுவி, 'உன் மனைவியும் மக்களும் சுகமோ' என்று சேமம் விசாரித்தான். குகன், 'எனக்கு அவர்களெல்லாம் உன்னைப்போல அருமையானவராகார். இளையபெருமாள் போல, யானும் உன் அரும்பெறலருளைப்பெறும் புண்ணியமுடையேனுயினும், அப்பெருமான்போல உன்னைப் பின்றொடர்ந்துவந்து, உனக்குத் திருவடித்தொண்டும் பொருதொழிற்சேவையும் புரியும் பாக்கியம் படைத்தேனில்லை. அப்படிப்பட்ட என் வாழ்வு எப்படி இனியதாம்?' என்று, தான் வாழ்ந்த வாழ்வு பயனற்ற வறிய வாழ்வென்ற கருத்துப் புலப்பட உரைத்தான். இவ்வாறுகூறி வருந்திய குகனுக்கு இராமன், ஆறுதல்கூறுவானுய், 'என்னுடன் வாராத

பரதனும் நீயும் சரிசமானமாக இனிமையானவரே; இங்கே, ஒரு பக்கத்தில் இருப்பாயாக' என்றான். குகன், இலக்குமணனையும் சீதையையும் அடிபணிந்தான்.

பின்பு, முற்றறிவுடன் நூற்கேள்வியுடைய இராமன், (கைகூப்பித்) தொழுதவண்ணமாய்நின்ற குகனை (முதலிற்) பார்த்து (ப்பின்பு) சுக்கிரீவ விபீடணாதி தோழரைப் பார்த்துக் கூறுவானாய், 'இவன், நிறைநீர்க்கங்கை இருபாற்கரைக்கும் இறைவன், எல்லாவுயிர்களுக்கும் தாயைக்காட்டிலும் அதிகமாக நன்மைசெய்பவன், குற்றமற்ற வேடர்களுக்கு வேந்தன், குகனென்னும் பெயருடைய வள்ளல்' என்றான்.* இராமன்கூறியதைக்கேட்ட சுக்கிரீவன் முதலியோர், குகனை அன்போடு தழுவி, நட்புக்கொண்டாடினார்கள். அப்போது சூரியன் மறைய, இரவு வந்தது. இராமன், மாலைவழிபாடுசெய்து, சீதையுடன் நித்திரைசெய்வானானான். இலக்குமணனும் குகனும் சேனைகளுடன் நின்று காவல்செய்வாரானார்கள்.

இராமன் முதலியோர் விமானமேறி அயோத்திநோக்கிச் செல்லுதல்

சூரியன் உதித்தபோது, எல்லாரும், பரத்துவாசமுனிவனை வணங்கி விடைபெற்று, விமானமேறிச் சென்றார்கள். செல்லாநிற்கையில், அயோத்திமாநகரத்தின் மதில் காணப்பட்டபோது, சுக்கிரீவாதியரை நோக்கி, இராமன், 'அதோ, தோன்றுகிறதே, அதுதான் அயோத்தி' என்று சுட்டிக்காட்டினன். அவர்களெல்லாரும், அந்நகரைநோக்கி, (அது மகாவிட்டுணுவான இராமபிரா

---

* தொழுதுநின் றவனைநோக்கித் துணைவர்கள் தமையும் நோக்கி
முழுதுணர் கேள்வி மேலோன் மொழிகுவான், 'முழுநீர்க் கங்கை
தழுவிரு கரைக்கு நாதன்; தாயினும் உயிர்க்கு நல்லான்;
வழுவிலா எயினர் வேந்தன்; குகனெனும் வள்ளல்' என்றான்.

துணைவர் - தோழர். மேலோன் - பெரியோன். தழுவுதல் - பொருந்தல். நாதன் - தலைவன். நன்மை - உபகாரம். நல்லான் - உபகாரி. வழு - குற்றம். எயினர் - வேடர்.

னுடைய அவதாரச்சேத்திரமும், பிறப்பிடமும், வாசத்தலமும், உறைவிடமும் ஆனதனால்,

'எவ்வுல கத்தோர் யாவரும் தவஞ்செய் தேறுவான் ஆதரிக்கின்ற
அவ்வுல கத்தோர் இழிவதற் கருத்தி புரிகின்ற தயோத்திமா நகரம்'*

எனப்போற்றும் மகத்துவமுடையதென்பதை மனத்துட்கொண்டு பத்திபரவசராய்) எழுந்துநின்று கைகுவித்துத் தொழுதார்கள்.

எதிர்கோள்ளவந்த மகாசனங்கள் இராமனைக் கண்டு ஆரவாரித்தல்

அப்போது, அனுமான் விமானத்தைக் கண்டு, பரதனை நோக்கி, 'இராமபிரானும் சீதாதேவியும் இலக்குமணப்பெருமாளும் வானரசேனாசமுத்திரத்துடன் வருகின்றவர்களைக் காண்பாயாக.'†

---

* கம்பராமாயணம் நகரப்படலம் க. எவ்வுலகத்தோர் யாவரும் - எல்லாவுலகங்களிலும் உள்ளாரெல்லாரும். ஆதரிக்கின்ற - ஆசைப்படுகின்ற. அவ்வுலகத்தோர் - மேலுலகத்தோர், வைகுண்டவாசிகள். அருத்திபுரிகின்றது - விரும்புவது.

மேலேகூறிய அயோத்திநகரவருணனைக் கவிப்பகுதியை மனத்துட் கொண்டு, அதற்குப் பிள்ளைப்பெருமாளையங்கார், அயோத்தியை வேங்கடமாக மாற்றி, மிகவும் இனிமையாகக் கவிரூபமாக உரைகூறியது இங்கே நினைவுக்கு வருகின்றது. அது வருமாறு :—

மாண்டுபிறக் குந்துயர்போய் வைகுந்தம் புக்கவரும்
மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே.

† 'அண்ணலே காண்டியால் அலர்ந்த தாமரைக்
கண்ணனும் வானரக் கடலும் கற்புடைப்
பெண்ணருங் கலமுநின் பின்பு தோன்றிய
வண்ணவிற் குமரனும் வருகின் றார்களை.'

அண்ணல் - பெருமையுடையோன். காண்டி - காண்பாயாக. அலர்ந்த - மலர்ந்த. தாமரைக்கண்ணன் - திருமால் (அவதாரமான இராமன்). கடல் - கடல் (போன்ற பெரிய படை). கற்புடைப் பெண் அருங்கலம் - கற்புடைய பெண்களுக்கு அருமையான ஆபரணம் (போன்ற சீதை). தோன்றிய-பிறந்த. வண்ண வில் - அழகுடைய வில்.

என்றான். அப்போது, ஈரேழுலகத்தோரும் எறினாலும் இடம் நிரம்பாத பொன்விமானத்திலே (பொன்மயமான) மேருமலைமீது மின்னலொடுவிளங்கும் மேகம்போல் வீற்றிருக்கும் சீதாசமேத ராமனை வரவேற்கவந்த அயோத்திநகரமாந்தர், கண்டு மகிழ்ந்து ஆரவாரித்தனர்.

பரதன் இராமனைக் காணுதல்

பரதன், உண்மையைக் காக்க உயிர்வாழ்வையொழித்து மேலுலகஞ்சென்ற தந்தை மீண்டு பூவுலகுக்கு வரக்கண்டவன் போல, அந்தத் தந்தை யிட்ட கட்டளையை நிறைவேற்ற நாடு துறந்து காடடைந்த இராமனை, இழந்த பெருநிதியைப் பெற்றான் போலவும், தாங்கமுடியாத நோய்நீங்கியவன்போலவும் கண்டான். கண்டவன், கும்பிடுதற்காகத் தான் முன் பிடித்திருந்த அனுமான் கையை விடுத்தான்.

அனுமான் இராமனுக்கு அயோத்திச்செய்தி அறிவித்தல்

பற்றப்பெற்ற கை விடுக்கப்பட்ட அனுமான், அக்கணமே, வானத்திலே தாவி, விமானத்தை மேவி, இராமன்பாதங்களில் விழுந்து பணிந்து, எழுந்துநின்று, 'அடியேன், அயோத்திக்குச் சென்று, பரதன் நெருப்பிற் குதிக்கத்தொடங்கிய தற்சமயத்தில் அவனையடைந்து, அக்கினியை அவித்து உன்வரவை அறிவித்துத் தீக்குளித்தலை நீக்கினேன். அதனால், அவன் இறவானாக, அவன் இறந்தால் தாமும் சாவாராயிருந்த எல்லாரும் சாவாது வாழ்வாராயினர்' என்றான்.

இராமன் அனுமானைப் புகழ்ந்து தழுவுதல்

இராமன், அவ்வாறுகூறின அனுமானைநோக்கிச் 'சத்தியவானே! தாயினும் அன்புடையானே! (முற்பிறப்புக்களில்) தீவினைகளை நாங்கள் செய்ப, (அந்த வினைகளின் பயனாக எங்களுக்கு) நீங்காத

சாவுகள் பலமுறை நேர, அந்தச் சாவுகளை நீ ஒழித்து (எங்கள் பக்கம்) நின்று (எங்களைக்) காப்பாற்றும்படி வாய்த்தது, (முற்பிறப்புக்களில்) நாங்கள்செய்துள்ள பெருந்தவப்பயனேயாம்*' என்றும், 'உன்னையும் என்தந்தையையும் என்னைப்பிரியாத தம்பியையும் என்தாயையும் யான்புகழுமாறு எவ்வாறு!' என்றும் கூறி மார்போடு இறுக அணைத்துத் தழுவினன்.

இவ்வளவில், விமானம் இராமனை யெதிர்கொள்ளவந்தவர்கள் நின்ற இடத்தை அணுகியபோது, (கவிஞர்) பாடுதற்குரிய புகழாளனன பரதன், இராமபாதுகாசேகரனுய்க்† கூப்பிய கை

---

* தீவினை யாம்பல செய்யத் தீர்விலா
வீவினை முறைமுறை விளைய மெய்ம்மையாய் !
நீயவை துடைத்துநின் றளிக்க நேர்ந்ததால்
யாயினு மன்பினுய் ! யாம்செய் மாதவம்.

தீர்வு இலா - நீங்குதல் இல்லாத. வீ(கின்ற) வினை - சாகின்ற செயல்-சாவு. 'முறை' என்பது, 'முறைமுறை'யென அடுக்கிப் 'பலமுறை'யென்ற பொருள் தந்தது. விளைய - உண்டாக. மெய்ம்மையாய்! - உண்மையுடையோனே! துடைத்து - நீக்கி. அளி[illegible]ாப்பாற்ற. நேர்ந்தது - வாய்ந்தது. ஆல் அசை. யாய் - தாய். 'தவம்', ஆகுபெயராய்த் 'தவப்பயன்' என்ற பொருள்படநின்றது. ஆர், யார் எனவும் ஆறு, யாறு எனவும் வருதல்போல ஆய் (- தாய்) யாய் என வந்தது.

இந்திரசித்து வீசிய நாகபாசத்தாலும் இராவணனெறிந்த வேலாலும் இறந்த இலக்குமணனைச் சஞ்சீவிமருந்துகொண்டுவந்து பிழைப்பித்ததையும் எரியைக் கரியாக்கிப் பரதன்சாவைத் தவிர்த்ததையும் நினைந்து எங்களுக்குப் பலமுறைநேர்ந்த சாவுகளை நீக்கினுயென்முன்.

† இராமபாதுகாசேகரன்-இராமனுடைய பாதகுறட்டைக் கிரீடமாகத் தலையிலே தரித்தவன்.

யினனாய் உயிர் (இல்லையென) உண்டென (உரைக்கும்படி) உலர்ந்த உடம்பினனாய் (விமானத்துள்ளார்கண்ணுக்குத்) தோன்றுவானானன்.*

இராமன் பரதனைக் கண்டு மகிழ்தல்

அப்போது, அனுமான், பரதனைக் கும்பிட்டுக்கொண்டு நோக்கி† 'உன்தொண்டு செய்வானாய் உனக்குப் பிரதிநிதியாக அரசாண்ட தம்பி இதோ நிற்கின்றான், காண்பாயாக' என்று இராமனுக்குச் சொன்னான். இராமன், பரதனைக் கண்டபோது, வைகுண்டத்திலிருந்துவந்த தசரதனைக் கண்டகாலத்தில் உண்டான மகிழ்ச்சிபோன்ற மகிழ்ச்சியடைந்து, தன்னை எதிர்கொள்ள வந்த அயோத்திமாநகர மகாசனங்களோடும் சேனைகளோடும் தாயர் மூவரோடும் இவ்விடத்தில் வந்துள்ள எல்லோரையும் பார்ப்பேனென்றெண்ணியபோது, விமானம் கீழே இறங்கியது. ஒவ்வொருவரும் தம்மைச் சுவர்க்கத்துக்குக் கொண்டுபோகும் விமானத்தைக் கண்டாற்போல, அந்த விமானத்தைப் பார்த்துப் பரவசமானார்கள்.

---

* ஈடுறு வான்புக ழிராமன் சேவடி
சூடிய சென்னியன் தொழுத கையினன்
ஊடுயி ருண்டென வுலர்ந்த யாக்கையன்
பாடுறு பெரும்புகழ்ப் பரதன் தோன்றினான்.

ஈடு - பெருமை. ('ஈடுசால் போரழித்து' சீவக. 59. தமிழகராதி). உறு - மிகுந்த. சேவடி (- சிவந்த பாதம்), ஆகுபெயராய்ப் பாதகுறட்டைக் குறித்தது. ஊடு - உள். ('எண்ணடிக் கின்ற விரலூடலைத்தி' தணிகைகளவு. தமிழ்ச்சொல்லகராதி) - (உடம்பின்) உள்ளே. யாக்கை - உடம்பு. பாடுறு - (கவிஞர்) பாடுகின்ற. 'பாடுறு' என்பதில் 'உறு' துணைவினை.

† யாவராயினும் ஒருவருக்கு ஒரு பெரியாரைச் சுட்டிக்காட்டும்முறை, அப்பெரியாரைநோக்கிக் கும்பிடுதலாம் என்பதைத் தெரிவிப்பாராய், இங்கே (இப்படலம் ௩௩௩ ௩௩௪-ஆம் கவிகளில்) 'தோன்றிய பரதனைத் தொழுது ....காட்டினான்' என்றார். 'சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலையைத் தொழுதுநோக்கி' என்பதற்குக் கம்பராமாயணசாரத்திற் கூறியுள்ள உரையைக் காண்க.

இராமன் வரக் கண்டார் எய்திய நிலைமை

அப்போது இராமன், தன்னை யெதிர்கொண்டு காணவந்தவருள்ளே, தாய்மாருக்கு(க் கறவைப்பசுவுக்கு நெடுநேரம் பிரிந்திருந்துவந்த) கன்று என்று சொல்லும்படியான தன்மையுடையவனான். தம்பியரான பரத சத்துருக்கருக்கு, அவர்கள் கண்ணுள் ஆடும் கண்மணிப்பாவையை ஒத்தான்; மாயையினின்று நீங்கியவ(ரான வசிட்டன்முதலிய முனிவ)ரெல்லாருக்கும்(முத்திக்குக்காரணமான) மனவொடுக்கநிலை வந்த தன்மையை ஒத்தான். (எல்லாருக்கும்) நோயுற்று உயிர்நீங்கிய உடம்புக்கு உயிர்திரும்பிவந்த தன்மையை ஒத்தான்.* அன்றி(ப் பிரிந்து வருந்தும் பிள்ளைகளுக்கு) எதிரேவரும் தாயையும் இனிய அமிழ்தத்தையும் ஒத்தான். அவனே உயிரான அனைவரும், அவன் வரவால், உயிரற்ற ஓவியங்கள் (-சித்திரங்கள்) உயிர்வரப்பெற்றாற்போன்றான்.

எல்லாரும் அவனுக்கு வரவேற்கும் உபசாரமாகச்சொரிந்த வாசனைப்பொடியும் சந்தனக்குழம்பும் புழுகுநெய்யும் முத்தும் பூவும், அவர்களுடைய ஆனந்தக்கண்ணீரோடும் யானைமதநீரோடும் குதிரைவிலாழி (-வாய்நுரை) நீரோடும் சேர்ந்து ஆறாகியோடி அலைகடலிற் சென்று அப்பாலும் போயின.

---

* தாயருக் கன்று சார்ந்த கன்றெனுந் தகைய னானான்;
மாயையிற் பிரிந்தார்க் கெல்லாம் மனோலயம் வந்த தொத்தான்;
ஆயிளை யார்க்குக் கண்ணு ளாடிரும் பாவை யொத்தான்;
நோயுறத் துலர்ந்த யாக்கைக் குயிர்புகுந் தாலும் ஒத்தான்.

அன்று - (இராமனைக் கண்ட) அப்போது. சார்தல் - அடைதல். தகை- தன்மை. ஆய்தல்-நுணுகுதல். ஆய் இளையார் (இராமன் பிரிவால்) மெலிந்த தம்பியர். இருமை - கருமை. உறுத்து - உற்று; பிறவினை தன்வினைப்பொருளில்வந்தது. உலர்ந்த - (உயிராகிய) ஈரப்பசையற்ற. யாக்கை - உடம்பு. புகுந்தாலுமென்பதில் உம்மை இறந்ததுதழுவியது.

'விச்சை (அஞ்ஞானம்) ஒழிந்த மெய்ஞ்ஞானிகளுக்குத் தமது மனம் லயிக்குமிடம் பரப்பிரஹ்மமாதலால், அதனது வேற்றுருவமாயுள்ள இராமபிரானைக் கண்டதும் அவர்கள்மனம் பரப்பிரஹ்மத்தைக் கண்டதுபோலவே பேரானந்தத்தையடைவதாயிற்று என்பது, இரண்டாமடியின் கருத்து.' வை. மு. கோ.

இராம லக்குமணர் வசிட்டனை வணங்கல்

கோசலை கைகேயி சுமித்திரையான தாயர் மூவரும் பரத சத்துருக்கரான தம்பியரிருவரும் வசிட்டனொருவனும் விமானத்தி லேறினார்கள். இராமன், வசிட்டன்பாதங்களில் விழுந்து வணங்கி னான். வணங்கினவனை, வசிட்டன், வாழ்த்தி, வாரியெடுத்து மார்போடணைத்து, அன்புமிகுந்தவனாய்ப் பிரிவுத்துன்பம் நீங்கும் படி பலமுறை தழுவி விட்டபோது அடிபணிந்த இலக்குமணனை யெடுத்துத்தழுவி ஆனந்தக்கண்ணீராட்டி ஆசீர்வதித்தான்.

இராம சீதா லக்குமணர் தாயரை வணங்கல்

இராம சீதா லக்குமணர், முதலிற் கைகேயியையும் பின்பு கோசலை சுமித்திரையையும் அடிபணிய, மூவரும் மூவரையும் இன்பக்கண்ணீர் மஞ்சனமாட்டி வன்புகூரத் தழுவி ஆசீர்வதித் தார்கள்.

பரதன், தன் தலைமீது கிரீடமாகச் சூடியிருந்த பாதுகங்களை அன்புடன் பாதகாணிக்கையாக இராமன்பாதங்களிற் சேர்த்து அடிபணிந்தான். இராமன் அன்புமிகுதியால் விம்மிப் பொருமி (அவசமானதனால்) நாவினால் யாதொன்றுங் கூற அறியானாய்ப் பரதனை, இருவருடைய உடல்களேயன்றி உயிர்களும் இரண்டறக் கலந்து ஒன்றாகும்படி இறுகத் தழுவி, அழுது தளர்பவனானான்*.

இலக்குமணன் வணங்கலும் பரதன் தழுவுதலும்

இந்திரனை வென்ற இந்திரசித்தைக் கொன்ற இலக்குமணன், இராசமரியாதைகளெல்லாம் இராமபாதுகைகளுக் கீந்த பரதன் பாதங்களிற் பணிந்தான். பரதன், ஆனந்தக்கண்ணீர் பெருக, இரு

---

*சேவடி யிரண்டு மன்பு மடியுறை யாகச் சேர்த்துப்
பூவடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி
நாவிடை யுரைப்ப தொன்று முணர்ந்திலன் நின்ற நம்பி
ஆவியு முடலு மொன்றத் தழுவினன் அழுது சோர்ந்தான்.

சே - சிவப்பு. அடியுறை - பாதகாணிக்கை. பொருமுதல் - விம்முதல், அழுதல் ஆகியவை, துன்பகாரணமாகவன்றி இன்பகாரணமாக நிகழ்ந்த மெய்ப்பாடுகள்.

கைகளாலும் இலக்குமணனையெடுத்து இறுகத் தழுவினான். (அப்போது, ஒருவர்பக்கத்தொருவராக அந்த இருவரையும் ஒருமிக்கப் பார்த்த) உலகத்தார், '(ஒத்த இராமபத்தியுடைய இருவருடைய வுடம்புகளில் இராமனைப் பிரியாது பின்தொடர்ந்து பணிவிடை செய்துகொண்டு) காட்டில் தங்கி வருந்திய (இலக்குமணன்) உடம்போ, (பிரிந்த துயரத்தினால்) செயலறும்படியான மனக்கவலைவளர நாட்டில்தங்கி வருந்திய (பரதன்) உடம்போ, (எது) அதிகமாக மெலிந்தது?' என்று கூறி வருந்தாநிற்க,* இலக்குமணனைப் பரதன் எடுத்து இறுகத்தழுவினான்.

சத்துருக்கன் இராமலக்குமணரையும் சீதையையும் வணங்கல்

சத்துருக்கன், இராமலக்குமணர்பாதங்களில் விழுந்து வணங்க, அவர்கள், அவனை அழுந்தத் தழுவி ஆசீர்வதித்தார்கள். அவன் சீதைபாதங்களை வணங்கி அவளுடைய வாழ்த்தையும் பெற்றான்.

இராமன் தன்னுடன் வந்தவர்களைப் பரத சத்துருக்கருக்கு அறிமுகமாக்குதல்

இராமன், தன்னுடன்வந்துள்ள சுக்கிரீவன் முதலியோரை இன்னாரின்னாரென்றுகூறிப் பரத சத்துருக்கருக்கு அறிமுகமாக்கினான். அவர்கள், பரதசத்துருக்கரை அடிபணிந்தார்கள். சுக்கிரீவன்,

---

* காடுறைந் துலைந்த மெய்யோ கையறு கவலை கூர
நாடுறைந் துலைந்த மெய்யோ நைந்ததென் றுலகம் நைய

கையறுதல் - செயலறல். கூர்தல் - மிகுதல்.

'இரண்டு உடம்பும் மெலிந்துள்ளனவாதலால், இங்ஙனம் விகற்பிக்கலாயிற்று. இராமனைப் பிரியாமல் அவனுடனே சென்று வருந்தி யிளைத்த இலக்குமணனது உடலைக்காட்டிலும் நாட்டில் தனித்துவருந்தி யிளைத்த பரதனது உடம்பே நைந்துள்ளது என்பது அவர்களது உட்கோளென்பது சொற்போக்கினால் தொனிக்கும்' வை. மு. கோ.

அங்கதன், விபீடணன், குகன், நீலன், சாம்பவான் முதலியவர்களைநோக்கித் தனித்தனியாக அவரவர்க்கு உரிய உபசார வார்த்தைகளைச்சொன்னான் பரதன்.

சுமந்திரன்முதலோர் இராமனைக் காணுதல்

முதன்மந்திரியான சுமந்திரன், மற்ற மந்திரிமார் சேனைத்தலைவர் அரசகுலத்தவர் முதலானாரோடு இராமலக்குமணர்பாதங்களில்விழுந்து பணிந்து எழுந்துநின்றான். அவனை இருவரும் கட்டித்தழுவினார்கள். (இராமன் காட்டைவிட்டு நாட்டையுற்று ஆட்சிசெய்யப்போவதை மனத்துட்கொண்டு) சுமந்திரன் 'இனிப் பூமிதேவிக்கு யாதொருதுன்பமும் இல்லையாம்' என்று கூறினான்.

விமானம் அயோத்திக்குச் செல்லுதல்

'ஏறுக' என்று இராமன் கட்டளையிடச் சேனைகள் விமானத்தில் ஏறின. 'இந்த விமானத்துக்கு அலைகடல் முழுதையும் அடக்கிய அகத்தியன்கை ஒப்பாகாது (என்பானேன், கடலொடு அகத்தியனையுள்ளிட்ட) உலகத்தையுட்கொண்ட திருமால்வயிறே, (அந்த உலகத்தையடக்கியதன்றித் திருமாலையடக்கவில்லையாதலால், உலகத்தையும் திருமாலான இராமனையும் ஒருசேர உட்கொண்ட) இந்த விமானத்துக்குச் சமானமாகாதென்று வானோர் புகழ்ந்து, மலர்மாரி சொரிந்து, ஆரவாரித்தார்கள்.* இந்தப்பூமியிலுள்ளார்கள் ஏறிய அந்த விமானம் அந்தரமார்க்கமாகச்சென்றது,

---

* உரைசெயின் உலக முண்டான் மணியணி யுதர மொவ்வா
கரைசெய லரிய வேதக் குறுமுனி கையும் ஒவ்வா
விரைசெறி யலங்கல் மாலைப் புட்பக விமானம் என்றென்
றுரைசெய்து வானு ளோர்கள் ஒண்மலர் தூவி யார்த்தார்.

அழகு என்ற பொருளுடைய 'மணியணி'யும் மாலையென்ற பொருளுடைய 'அலங்கல்மாலை'யும் மீமிசைச்சொற்கள். 'ஒவ்வாது' என்பது, கடைசியெழுத்துக் குறைந்து 'ஒவ்வா' என நின்றது.

பூமி, தன்னிடத்துள்ளாரோடு அந்தரமார்க்கமாக இந்திரலோகத்தைக் காணச்சென்றதுபோன்றது. தேவர்களோடும் அவர்கள் தலைவனான இந்திரனோடும் அமராவதிநகரம் (அயோத்திமாநகரத்தைக் காண) விண்ணிலிருந்து மண்ணிலிறங்கியதுபோல(த் தலைவனான இராமனும் அவனைச்சார்ந்த மற்றவர்களும் இருந்த) அந்த விமானம் நந்திக்கிராமத்தில் இறங்கியது.

மீட்சிப்படலம் முற்றிற்று.

திருமுடிசூட்டுபடலம்

இராமன் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பெற்றதைக் கூறுவது.

இராமன் பரிவாரத்தோடு அயோத்தியையடைதல்

இராமனும் தம்பிமார் மூவரும், நந்திக்கிராமத்தையடைந்து, சடையை(ச் சிக்கெடுத்து)ப் போக்கி, (மயிர்முடியாக்கி) மயிர்வினைமுடித்துச் சரயுநதியில் நீராடியபின், ஒப்பனை* செய்வோரால் ஆடையாபரணங்களால், அலங்காரஞ்செய்யப் பெற்றார்கள். பின்பு, (நான்கு) வேதங்கள்போன்ற (நான்கு) வெள்ளைக்குதிரைகள்பூண்டதும்பைம்பொன்மாலைகளும்பருமணிவடங்களும் அணியப்பெற்றுச் சூரியன்போலச் சோதிமயமாக விளங்குவதுமான இரதமீது இராமன் ஏறி வீற்றிருக்க, இலக்குமணன் குடைபிடிக்கச் சத்துருக்கன் சாமரம் இரட்டப் பரதன் (தேர்ப்பாகனாகிக்) கோல்கொண்டு தூண்டிக் குதிரைகளைச் செலுத்தாநிற்கத் தேர் செல்வதாயிற்று. தேரின் ஒருபக்கம் விபீடணனும், மற்றொரு பக்கம் சுக்கிரீவனும், முன்னே அங்கதனும், பின்னே அனுமானும்

---

* ஒப்பனை - அலங்காரம்.

யானைமீது போயினார்கள். ஏனைய வானரத்தலைவர்களும் கசாரூட ராய்* சென்றார்கள். (அட்டாதசதேசராசரெனப்பட்ட) பதி னெட்டுநாட்டுப் பார்த்திபர்கள், மேலே வெண்கொற்றக்குடை யும் இருபக்கங்களிலும் சாமரையும் சென்னிமீது தேசோமயமான செம்பொற் கிரீடங்களும் உடையவர்களாய்த் தொழுதகையின ராய்ச் சூழ்ந்துசென்றார்கள்.

மனிதவடிவங்கொண்டிருந்த வானரமாதர்கள், பெண்குதிரை கள் யானைகள்மேலும் பல்லக்கு முதலிய ஊர்திகள்மீதினும் ஏறியவ ராய், விண்மீன்கணம்† வெண்மதியைச்சூழ்ந்து விளங்குதல்போலச் சூழ்ந்துவரப் பூத்தொழிலமைந்துபொலியும் பொன்விமானமீது சீதாதேவி சென்றாள்.

தேவர்களும் முனிவர்களும் பூக்களை எங்கும் இடைவிடாமல் மழைபோலச் சொரிந்ததனால், பூமி, (தரைதோன்றாதபடி) பூக்கள் நிறைந்து, பூமயமானதனால், பூமிக்கு(ப்பூ என்ற பெயரோடு, மண் நிலம் தரணி முதலிய பல பெயர்களிருந்தாலும், அப்பெயர்களெல் லாவற்றிலும்) பூ என்றபெயர், (பூமாரி சொரியப்பெற்ற) இப்போது, பொருத்தமானதாயிற்று.‡

இராமன், அயோத்தியையடைந்து, தாய்மாரைவணங்கித் தன் குலதெய்வமான அரங்கநாதனையும் குலகுருவான வசிட்டனை யும் வணங்கி, அரண்மனைக்குள்ளே போனான். (பதினான்கு நீண்ட

---

* கசாரூடராய் - யானைமேலேறியவராய்.

† விண்மீன்கணம் - நட்சத்திரக்கூட்டம்.

‡ கேவல மலராய் வேறோ ரிடமின்றிக் கிடந்த வாற்றாற்
பூவெனும் நாமம் இன்றிவ் வுலகிற்குப் பொருந்திற் றன்றே.

கேவலம் - தனிமை (தமிழகராதி). கேவலமலராய் - மலர்மாத்திர மாய். நாமம் - பெயர். இன்று - இப்போது. அன்று, ஏ அசைகள்.

ஆண்டுகள் பிரிந்திருந்து திரும்பிவந்த) இராமனைக்கண்ட அயோத்தி நகரமாந்தர்கள் ஆடவர் பெண்டிர் அனைவரும், உவகைமிகுதியால் கள்ளுண்டு களியாட்டாடுவார்போல, ஆடைசோர்வதறியாமல் ஆனந்தக்கூத்தாடினார்கள்.

பிரதான அரசமாளிகையை விபீடணன்முதலியோர் காணல்

'விபீடண சுக்கிரீவருக்கும், இராக்கத வானர சேனைத்தலைவர்களுக்கும் நமது பிரதான அரண்மனையிலுள்ள சிறப்புக்களைத் தெரிவிப்பாயாக' என்று இராமன், பரதனுக்குக் கட்டளையிட்டான். மேருகிரிபோலவிளங்கும் அந்த அரண்மனைக்குப் பரதன் அவர்களெல்லாரையும் அழைத்துக்கொண்டுபோனான். அவர்கள், அந்த மாளிகையைக் கண்டபோது, அதனிலுள்ள வயிரம் மாணிக்கம் நீலம் மரகதம் முதலான குற்றமற்ற ரத்தினங்கள்வீசும் ஒளித்தொகுதியைக் கண்கொட்டாது பார்த்துத் திகைத்துநின்றார்கள். திருமால்மார்பிலே அணிந்த கவுத்துவமணிபோலவிளங்கும் அந்த மாடம், இக்குவாகுமன்னனுக்குப் பிரமதேவன் அருளியதென்று அவர்களுக்குப் பரதன் சொன்னான். 'இது, எங்களாற் புகழுமியல்பினதோ!' என்று அதிசயித்துக்கூறி, விபீடணனுதியர், அம்மாளிகையைநீங்கி, ஒரு மண்டபத்தையடைந்தார்கள்.

இராமன்மகுடாபிஷேகத்துக்கு அனுமான் தீர்த்தங்கள் கொண்டுவரச் செல்லுதல்

'இராமபிரான் பட்டாபிடேகத்துக்குக் காப்புநாண் அணியும் நன்னாள் எந்நாளென்று நிச்சயிக்காதிருப்பானேன்?' என்று சுக்கிரீவன், பரதனை வினவினான். 'தீர்த்தங்கள் வருதற்காகக் காலம் தாழ்க்கவேண்டியிருக்கிறது' என்று பரதன் சொன்னான். அப்போது, சுக்கிரீவன் அனுமானை நோக்க, அவன், தீர்த்தங்கள் கொண்டுவர, மிகவும் விரைந்துசென்றான்.

இராமன் காப்புக்கட்டும்நாள் குறிக்கப்படுதல்

பரதன், சுமந்திரனைநோக்கி, 'வசிட்டனை அழைத்துவருக' என, அவன் அவ்வாறுசெய்தான். வந்த வசிட்டனை எல்லாரும் அடி பணிந்து எழுந்துநின்றார்கள். பரதனது வேண்டுகோளின்படி ஆத னத்தில் அமர்ந்த வசிட்டன், 'இராமன் பூதேவி ஸ்ரீதேவியோடுகூடி (ப் பூமியை ஆண்டுசெல்வத்தை அநுபவித்து) அரசாட்சிசெய்தற்கு (முன் செய்யும் சடங்கான) காப்புநாண் பூணுதற்குரியநாள், நாளைத் தினமாம்' என்றான்.

முடிசூட்டு முகூர்த்த ஓலைகள் கண்டு வந்து மூவுலகத்தோரும் மொய்த்தல்

தேவேந்திரனுக்குக் குருவான பிருகற்பதிபோன்ற புரோகித ரும் வசிட்டனும் இராமன் முடிசூடும்நாளுடன் வேளையை ஆராய்ந் தறிந்து எழுதி, அனைவருக்கும் ஓலைபோக்கினார்கள். திரிலோகத் தினரும் திரள்திரளாக வந்துசேர்ந்தார்கள். அவர்கள்தொகை இவ்வளவினதென்று (நான்கு நாக்குள்ள) பிரமதேவனும் வரை யறுத்துச்சொல்லமுடியாதென்றால், (ஒருநாவேயுடைய) யான் கூறுமாறுண்டோ!*

---

* 'பொன்னம்பலநாதனென்னும் திருநாமமுடையவனே! (ஈராயிர நாக்குடைய) ஆதிசேடனே, புகழுதற்குரிய உன்புகழைக் கூறுதற்கு(த் தனக்குள்ள இரண்டாயிர நாக்குக்கள் போதாதனவென்றுகருதி அதிகமான நாக்குக்கள் பெற) விரும்பிப் பிரமதேவனை (நோக்கிப் பிரார்த்தித்து) இன் னும் பலநாக்குக்கள் தந்தருள்வாயாகவென்று இரந்துவேண்டினனென்றால், ஒருநாக்கேயுடைய யான் உன்புகழைச்சொல்லத் தகுதியுடையவனாவனோ? சொல்லுவாயாக' என்ற கருத்துள்ள,

பிரமாவைச் சேடனே பேட்டிரந்தா னென்றல்
ஒருநாவேன் உன்சீர் உரைக்கத்—தரமோசொல்
பொன்னம் பலநாதா போற்றுன் புகழ்புகலற்
கின்னம் பலநாதா என்று.

என்ற பாட்டு (வே. ப. சு. தனிக்கவித்திரட்டு என்ற புத்தகத்திலுள் ளது) இங்கே நினைவுக்கு வருகின்றது.

பெட்டு - விரும்பி. நா - நாக்கு. சீர் - புகழ் - கீர்த்தி. போற்றுதல் - துதித்தல்.

சுக்கிரீவன் விபீடணன் அங்கதன் சாம்பன் முதலானவரோடு வசிட்டமுனிவன் சென்று இராமனையடைந்து, 'நாளைத்தினம் நீ முடிசூடும் நல்லதினம்' என்று தெரிவித்தான்.

மகுடாபிடேகத்துக்காக, மண்டபம் அமைத்தலும் புண்ணிய தீர்த்தங்கள் கொணர்தலும்

பிரமதேவன்கட்டளைப்படி, (இராவணனுடைய பட்டத்தரசி மண்டோதரியின் தந்தையான) மயனென்ற சிற்பி, மகுடாபிடேக மண்டபம் அமைத்தான். அனுமான், நான்குதிசைகளிலுமுள்ள நாற்கடல்நீரும் (கங்கை முதலிய) எழுபுண்ணியநதிகளின் நீரும் கொண்டு வந்துசேர்த்தான். அரசர்கள், சரயுநதிநீரை இரத்தினக்குடங்களில் முகந்து யானைகள்மேலேற்றிக் கொண்டுவந்துசேர்த்தார்கள்.

இராமபட்டாபிடேகம்

மாணிக்கமணிகளிழைத்த தங்கப்பலகையும் வயிரமணிகளிழைத்த தங்கத்தூண்களுமுடைய பீடத்திலே, இராமனும் சீதையும் அமர்ந்தார்கள். மங்கலகீதம் பாட, மறையொலி முழங்கச் சங்கம் தொனிக்கக் காளம் சத்திக்க, மத்தளம்முழங்க, மற்றவாத்தியங்கள் ஒலிக்கத் தேவர்கள் பூமழைபொழியப் புண்ணியதீர்த்தங்களை முனிவரும் வேதியரும் மந்திரிமாரும் பிறமுதுபேரறிஞரும் முன்னாகவும், சுக்கிரீவன் விபீடணன் அனுமான் முதலோர் பின்னாகவும், இராமனுக்கு அபிடேகஞ்செய்தார்கள்.]

204 அரியணை யனுமன் தாங்க வங்கத னுடைவா ளேந்தப்[1]
பரதன்வெண் குடைக விக்க[2] விருவருங் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க[3] வெண்ணெயூர்ச் சடையன் றன்ன[4]
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

கொண்டுகூட்டு: அனுமான் அரியணைதாங்க, அங்கதன் உடைவாள் ஏந்தப் பரதன் வெண்குடைகவிக்க இருவரும் கவரிவீச, விரைசெறிகுழலி

ஓங்க, வெண்ணெயூர்ச்சடையன் தன்ன(து) மரபுளோர் மௌலிகொடுக்க, வாங்கி, வசிட்டன் புனைந்தான்.

பொருள்: (இலங்கைப் போர்க்களத்தில் இராமனைத் தோள் மேற்கொண்டு திரிந்து தொண்டுபுரிந்த) அனுமான் (மகுடாபிடேக மண்டபத்திலே இராமன் வீற்றிருந்த) சிங்காதனத்தை (அவன் பாதத்தடியில்நின்று தூக்கிச் சுமந்ததோற்றமாகப் பற்றி)த் தாங்கா நிற்க, அங்கதன், (மெய்காப்பாளனாக) உடைவாளேந்திநிற்கப் பரதன் (பின்னேநின்று) வெண்கொற்றக்குடைபிடிக்க, (மற்றைத் தம்பியரான இலக்குமண சத்துருக்கர்) இருவரும் (இருபக்கத்தும் நின்று) வெண்சாமரம்வீசச் சீதாதேவி (அருகே அமர்ந்து) விளங்க (வீற்றிருந்த இராமபிரான் சென்னிமீதே) வெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளல்வமிசத்து முன்னோர் திருமுடிகொடுக்க வாங்கி வசிட்டன் சூட்டினான்.

அரி - சிங்கம். அணை - ஆதனம். உடைவாள் - உடையிற் சொருகும் கத்தி. கவரி - சாமரை. விரை (-மணம்) செறி (-மிகுந்த) குழலி (-கூந்தலுடையவள்) இங்கே சீதையைக்குறித்தது.

ஓங்குதல் - சிறத்தல். 'தன்னது' எனற்பாலது 'தன்ன' என ஈறு குறைந்துநின்றது செய்யுள்விகாரம். மரபு - வமிசம். வசிட்டனே என்பதில் ஏ இசைநிறை. மௌலி - கிரீடம்.

உலகத்துள்ள உயர்பதவிகளுள்ளே உயர்ந்தது, அரசரெல்லாரும் அடிபணியும் சக்கரவர்த்திப்பதவி. அப்படிப்பட்ட சக்கரவர்த்திப்பதவியைக் கொடையாகக் கொடுப்பவனொருவனுளனாயின், அவன் சக்கரவர்த்தியினும் உயர்ந்தவனாவன். ஒருவனே அப்படிப்பட்ட கொடையாளனாக்குபவன் உயர்வு, உரைக்கும் தரத்ததன்றென்பானேன்! உன்னும் தரத்ததுமன்று. கம்பர், அத்தகைய மனவாசகங்கடந்த உயர்வைத் தமக் குடைமையாக்கிக் கொண்டவராவர். எவ்வாறெனில், கம்பர் தம்மை ஆதரித்த சடையப்பவள்ளலை உயர்வற உயர்நலமுடையவராக்கக் கருதினார். கருதிய

வர், ஒருவன் சக்கரவர்த்தியாகவுள்ளானென்பதற்கு அறிகுறி, அவன்முடி; அவனுக்கு முடிகொடுப்பது, அவனைச் சக்கரவர்த்தியாக்குதற்கு அறிகுறி; ஆகவே, சடையப்பவள்ளலைச் சக்கரவர்த்திக்குரிய மகுடக்கொடைகொடுத்த மகுடத்தியாகியாக்கிச் சக்கரவர்த்தியினும் உயர்ந்தவனுக்குவாராய், ஒருவன் முன்னோர்செய்த அருஞ்செயல் அந்த ஒருவனுடையதாக உபசரித்துக்கூறுங் கவிமரபை அநுசரித்துச் 'சடையன் தன்ன மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி' யென்றுரென்க. இதனுல், கம்பரது செய்ந்நன்றியறிதற்சிறப்பும் கவிசாதுரியச்சிறப்பும் ஒருங்கு நன்குவிளங்குகின்றன.

'சூரியகுலத்தவரெனப்படுகின்ற சோழவரசர்க்கு ஒருசார் வேளாண் மரபினர் பட்டாபிஷேகசமயத்தில் மகுடங்கொணர்ந்துதருதல் தமிழ்நாட்டு வழக்கமாதலாலும், இராமபிரான் சூரியவமிசத்தவனுதலாலும் அந்தத் தமிழ்நாட்டுவழக்கையொட்டி வேளாண்குலத்துச் சடையப்பமுதலியாரின் முன்னோர் மௌலிகொடுத்தாரென்றனரென்பர்' வை. மு. கோ.

பாடபேதம்: [1] பற்ற. [2] கவிகையேந்த. [3] கமலத்தாள்சேர். [4] வெண்ணெய்மன் சடையன் தங்கள்.

[உலகத்தோரெல்லோரும், தங்கள் தங்களை நேசித்தல்போல, இராமனை நேசித்து, அவன்வாழ்வு தங்கள் தங்கள் வாழ்வாகக் கொண்டிருந்ததனுல், அவனொருவன் சூடிய மகுடம், அனைத்துலகத்தோர்க்கும் தங்கள்தங்கள் தலைகள்மேல்வைத்த தொத்தது.*

---

*..................மூவுலகத்தோர்க்கும்....................

தத்தமுச் சியின்மேல் வைத்த தொத்ததத் தாம மௌலி.

தாமம் - மாலை. மௌலி - கிரீடம். தாம மௌலி - மாலை (சுற்றிய) கிரீடம்.

இராமன், தம்பியர்மூவர்க்கும் யுவராசகிரீடத்தை (இளவரசு முடியை)ச் சூட்டித் தனது செங்கோலைப் பரதனை நடத்தும்படி பணித்து, அளவிடவரியபோகங்களை அனுபவிப்பானானான்.†

திருமுடிசூட்டுபடலம் முற்றிற்று.

[தொடரும்]

---

† 'இக் கருத்தடங்கிய இப் படலத்தின் இறுதிச்செய்யுளுக்குப்பின் 'மறையவர்வாழி' என்ற ஒரு வாழ்த்துச்செய்யுளும் அதன்பின் 'விடையிறுத்தபடலத்'திலுள்ள "உம்பரோடு" (நஎ) என்ற செய்யுளும் இருக்க, (இந்த)ப் படலமும் யுத்தகாண்டமும் முற்றும் என்று எழுதியுள்ளது. வேறொருபிரதியில் "மறையவர்" என்ற இங்குக் காட்டியசெய்யுளோடு வேறொரு வாழ்த்துச்செய்யுளிருக்க, படலமும் காண்டமும் முற்றும் என்று எழுதியுள்ளது.' வை. மு. கோ.

இதனால், கம்பர், திருமுடிசூட்டுபடலத்தை இறுதிப்படலமாகக் கொண்டதாக இராமாயணம் பாடிமுடித்தபின், 'உம்பரோடு' என்ற பாட்டைப் பாடி, முடித்திருந்த ராமாயணத்தின் கடைசிக் கவிக்குப்பின் சேர்த்தாரோ என்றும், அப்படிச் சேர்த்தபின் விடைகொடுத்தபடலத்தைப் பாடி, மேற்குறித்த 'உம்பரோடு' என்ற பாடலைத் திருமுடிசூட்டுபடலத்தினின்று நீக்கி விடைகொடுத்தபடலத்தின் இறுதியிற் சேர்த்தாரோ என்றும், ஒருகால், இம் மாற்றங்களெல்லாம் பிற்காலத்தவர்களாற் செய்யப்பட்டனவோ என்றும் எண்ணங்கள் எழுகின்றன. இதுநிற்க.

இராமாயணத்தோடு அவயவசம்பந்தம் (Organic Connection) இல்லாத உத்தரகாண்டம், கம்பராற் பாடப்பட்டதன்றென்று எல்லாரும், ஒட்டக்கூத்தரா லியற்றப்பெற்றதென்று பலரும், வாணிதாசரென்பார் பாடியதென்று சிலரும் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கைகளை மனத்துட்கொண்டு, கம்பராமாயணம் முதலாறு காண்டங்களுக்கும் உரையெழுதிய ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யரவர்கள் உத்தரகாண்டத்துக்கு உரையெழுதாதுவிட்டமையோடமையாமல், அது கம்பராமாயணத்தின் அங்கமன்றென்ற கருத்துடையாரென்று கருதும்படி, தாம் உரையோடு பதிப்பித்திருக்கிற கம்பராமாயண யுத்தகாண்டத்தை,

விடைகொடுத்தபடலம் முற்றும்
யுத்தகாண்டம் முற்றும்
கம்பராமாயணம் முற்றிற்று

என்று எழுதிமுடித்திருப்பது, கவனிக்கத்தக்கது.

உ

பிற்குறிப்புக்குப் பிற்குறிப்பு

பேராசிரியர். திரு. S. S. பாரதியவர்கள் எழுதிய "குறிப்புக்குப் பிற்குறிப்பு", "செந்தமிழ்" ௩௧-ஆம் தொகுதி ௩௫௧-ஆம் பக்கத்தில் வெளியாயிருக்கிறது.

கம்பராமாயணசாரம் அயோத்தியாகாண்டம் 181-ஆம் பக்கத்தில், "குகன், தன்தந்தையைத் தழுவுதலில் தனக்குண்டாம் களிப்பினும் அதிகமான களிப்புண்டாகப் பரதனைத் தழுவினான்." என்றிருப்பதை நான் எடுத்துக்காட்டியது, தழுவுதலில் உயர் வெண்ணமிருக்கவேண்டிய அவசியமில்லையென்பதை நிரூபிக்கக் காட்டியதாம்; குகன் பரதனைத்தழுவினான் என்ற என் உரைக்கு ஆதாரமாகக்காட்டியதன்று. அவ்வாறாக, அதனை அதற்கு ஆதாரமாக நான் காட்டியதாகக்கூறிக் "குறிப்புக்குப் பிற்குறிப்"பில், அது 'அளவைமுறையாகாது' என்றது நியாயமன்று.

அடிபணிதலில் தாழ்வுணர்வு அவசியமாக உள்ளது. 'வந்தெதிரே' என்ற பாட்டின் புதியவுரையில், குகன் பரதனை அடிபணிந்தான், பரதன் குகனை அடிபணிந்தான்: என்ற இடங்களில் குகன் தான் சிற்றரசனென்ற தாழ்வுணர்வோடும், பரதன் தான் தம்பியென்ற தாழ்வுணர்வோடும் வணங்கினவராவர். ஒத்தாரிருவர் ஒருவரையொருவர் மாறி மாறி அடிபணிதலினும் ஒருவர் மற்றொருவரைத் தம்மினும் உயர்ந்தவராகக் கருதி மேன்மைப்படுத்தியவராவர்.

"தந்தையினும் களிகூர" என நின்றாங்கே சொற்றொடரின் செம்பொருளைக் கொள்ளுவதே புலமையறம். அதைவிட்டுத் 'தந்தையைத் தழுவுதலினும் களிகூர', எனச் சொற்பெய்து பொருள் மாற்றத்துணிவானேன்?" என்று கேட்கின்றார்கள். இந்தக் கேள்வி எழுதல் இயல்பானதென்று நான் முன்னதாக அறிந்து, மேற் குறித்த கம்பராமாயணசாரம் அயோத்தியாகாண்டம் 181-ஆம் பக்கத்தில், "தந்தை மகனைத்தழுவுதல்போலக் குகன் பரதனைத் தழுவினனெனப் பொருள்கொள்ளல் குகனுடைய அகங்காரமற்ற

பணிவுடைமையோடு பொருந்தாது" என்பதை மேற்கூறிய கேள்விக்கு விடையாகக் கூறியிருக்கிறேன். இது, திரு. பாரதியவர்களது பரதன் குகனைத்தழுவினான் என்ற உரைக்கும் கூறக்கடவதான சமாதானமாகும்; எதனாலெனில், தன்மனத்துள்ளே குகனைத் தமயனாகக்கொண்டு, அவனை, "இன் துணைவன் இராகவனுக்கு இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்" (குகப்படலம்-௬௬) என்றுகூறிக் கோசலைக்குத் தெரிவிக்கும் பரதன், குகனைத் தழுவுகையில், தான் (இளைய பரதன்) அவனினும் (மூத்த குகனினும்) உயர்வுடையவனென்ற உணர்வுடையவனாயிருத்தல் கூடாததாயிருத்தலாலென்க. தந்தையையும் அவன் மூத்தவனென்பது பற்றிய இயல்பான உயர்வுணர்வையும் பிரிக்குமாறில்லையென்பதும் அவ்வாறே மகனையும் அவன் இளையவனென்பதுபற்றிய இயல்பான தாழ்வுணர்வையும் பிரிக்குமாறில்லையென்பதும் பிரிக்கமுயலுதல் இயற்கையை மாற்றமுயல்வதாமென்பதும் கூறவேண்டியதில்லை.

தழுவுதலோடு உயர்வெண்ணம் சம்பந்தப்பட்டதென்ற பொருள்படவும், அதுகாரணமாக இளையோர் மூத்தோரைத் தழுவுதல் தமிழ்ப்பழஞ்செய்யுளிற் காணப்படவில்லையென்ற பொருள்படவும் கூறுகின்றார்கள். இவ்வாறு கூறுகின்றவர்கள், பரதன் குகனைத் தழுவினானென்று உரைகூறும் "வந்தெதிரே" யென்ற வாதப்பாட்டே, அவர்களுடைய உரைப்படி (என் உரைப்படியன்று) இளையோன் மூத்தோனைத் தழுவுதலைக்கூறும் பாட்டாயிருக்கிறதென்பதை எண்ணிப்பார்த்தார்களில்லைப்போலும். இது, "ஒக்கலிற் பிள்ளையிருக்க, ஊரெல்லாந்தேடுதல்போல" என்ற பழமொழியை நினைவுறச்செய்கின்றது.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

வெள்ளகால்.

உ

மஹாமஹோபாத்யாய-தாக்ஷிணாத்யகலாநிதி-திராவிடவித்யாபூஷணம்

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

உலகவாழ்வைத்துறந்த ஆற்றொணாத்துயர்குறித்துப் பாடிய

இரங்கற்பாக்கள்

1 சிதைவுற்ற தமிழ்நங்கை யினியுய்யா ளெனவிரங்கித்
திகைக்குங் காலைப்
புதைவுற்ற புற்றகத்தி னெடுத்தவட னுறுப்பையெலாம்
பொருத்தி யொன்றாய்ச்
சதைவைத்துப் புண்ணாற மருத்துவஞ்செய் பண்டிதனே
சாமி நாதா
விதையற்ற புலத்தவர்போல் யாமுழல நீயாங்கு
மேவி னாயே.

2 உண்ணாம லுறங்காம லோயாமன் மழலையமு
தூற்றிக் கொண்டு
கண்ணேயென் மாட்டன்பாற் களிக்கின்றா யுனதுடலங்
களைக்கு மென்று
தண்ணாருந் தமிழ்மதுரைக் கயற்கண்ணி யுனைத்தொட்டிற்
சங்க மேற்றிப்
பண்ணாரு மறைபாடக் கண்வளர்கின் றனைபோலும்
பள்ளி கொண்டே.

3 சந்தமறைக் குலக்கொழுந்தே நூலுழவ கலையரசே
சாமி நாதா
மைந்தர்களை யினத்தவரை மனைமுதலாம் பலபொருளை
மற்று முள்ள
சிந்தைநிரம் பன்பினரைத் தீர்த்தத்தை யாலயத்தைத்
தீர்ந்தா யேனும்
நந்தலிலாத் தமிழேட்டுச் சுவடிகளை நயவாது
நடந்த தெங்கே.

4 ஏடுகளைத் தேடியலே தளர்நடையை யூக்கியிடை
யெழுந்த வீறும்
பாடுபெற வாராயுங் கூர்நோக்கு மெழுதுகையும்
பதிப்பித் தாங்குப்
பீடுபெறு வனப்பாலே மலர்முகமு மினியாங்குப்
பெறுவோ மையா
வீடுபெறு வித்தகனே தமிழ்ச்சாமி நாதைய
விளம்பு வாயே.

5 மாடிவீட் டிருந்துகால் வழுக்கிக்கீழ் விழுந்தறிவு
மயங்கிப் பின்னர்
வீடறிவு பெறுபொழுதுந் தமிழேடெங் கேயென்ன
வினவுங் கண்ணே
கூடுசங்கத் தமிழ்முத்தே மறந்ததமிழ் மரபுலகக்
கொள்ள வைத்த
தேடரிய திரவியமே திகழ்சாமி நாதைய
சென்ற தெங்கே.

6 சங்கநூல் காப்பியங்கள் கற்பதுவும் வரலாற்றுச்
சரிதை யாவுந்
தங்குலகங் கொளவாய்ந்து சாற்றுவதுங் கலைமரபின்
சார மெல்லாம்
இங்குணர்ந்து நுகர்வதுவு நீகொடுத்த பிச்சையினு
லியைந்தோ மன்றே
பொங்குமிசை மரபமைந்த பொருட்சாமி நாதைய
போய தெங்கே.

7 உவர்நீர்பா யாற்றுவழி நன்னீரைப் பாயவிட்டே
யோர்நன் றின்றி
அவமாகிப் பாழ்பட்ட புலமெல்லாம் விளைபுலமா
வாக்கி னற்போல்
நவநாக ரீகத்து மோகத்தாற் பாழ்பட்ட
நம்பு லத்துட்
சிவமேவுந் தமிழ்விளைத்த செயசாமி நாதவெங்குச்
சென்றாய் நீயே.

8 காணாத நூல்களைக்கண் டெடுக்கவல்லா ரினியாவர்
கண்டெ டுத்தும்
மாணாத பாடமறிந் தொதுக்கவல்லா ரினியாவர்
மற்றந் நூலின்
கோணாத கருத்தையறிந் துரையியற்றி யெங்களுக்குக்
கொடுப்பா ரியாவர்
வாணாளைத் தமிழ்க்களித்த மால்சாமி நாதவெங்கு
மறைந்தாய் நீயே.

9 செந்தமிழ்மாப் பெருந்தேவி தன்னையணிந் தவட்குரிய
சீத னத்தை
நிந்தையற வளர்வித்துப் பண்டிளமை பெறவைத்து
நித்தம் போற்றி
வந்தருளுந் தமிழ்ச்செவிலி யெனுஞ்சாமி நாதையன்
மறைசால் சோதிச்
சுந்தரனில் லாதிரவி யுதித்தாலென் னத்தமித்தென்
சொல்லுங் காலே.

10 சங்கநூல் பிற்காலத் தமிழ்நூல்க ளெனும்பேதஞ்
சற்று மின்றி
அங்கவற்றை யுவக்குமன்பா லவையுன்ற னுறுப்பாத
லறிந்து கொண்டோந்
தங்குதமிழ்ச் சாரமற்ற விம்மையம்மைச் சார்பொதுக்குஞ்
சாமி நாதா
இங்கனுனைக் காணும லெதைக்கொண்டு துயராற்றற்
கிருக்கின் றோமே.

11 தங்குமுல கெலாஞ்சார்ந்து பல்லூழி முயன்றாலுஞ்
சாமி நாதன்
மங்கலஞ்சா றமிழ்த்தொண்டு போற்சிறக்கப் புரியுமொரு
வழியுண் டாமோ
அங்கவனே யெலாப்பேறு மளிக்கின்றா னெனநுகர்ந்தோ
மவனுஞ் சென்றான்
செங்கலசத் தமிழ்முனிவந் தாற்றினுமெந் துயராறுஞ்
சீர்மைத் தொன்றோ.

12 கழுக்குன்றச் சாரலின்வாய்ப் பிடிகண்டு கலந்துலவிக்
களித்துத் தூங்கும்
இழுக்கொன்று மில்லாத தமிழ்பொழியு மதக்களிறே
யெங்கட் கெல்லாம்
வழுக்கொன்று முன்னூற்றுக் கோல்போல்வாய் நால்வேத
மரபில் வந்த
ஒழுக்கொன்று விழுப்பொருளே யுயர்சாமி நாதவெமை
யொருவ லாமோ.

13 உன்னுணை வழிநடப்போ முன்பெயரை யுருச்செய்வோ
முன்னை வைத்துப்
பொன்னுனு மணியானு மலங்கரித்துத் தமிழ்ப்பூசை
புரிவோ மையா
தன்னேரில் லாத்தமிழ்க்கோர் சஞ்சீவி மாமருந்தே
சாமி நாத
மன்னேயெங் குலதெய்வ மாகியிருந் தருள்புரிவாய்
மகிழ்சி றந்தே.

14 நின்னாலே தமிழ்நங்கை சிறப்புற்று நீடூழி
நிலேக்கின் ருளால்
நின்னாலே கபிலர்முதற் புலவரெலா நிலவுகின்ருர்
நேரொன் றில்லா
நின்னாலே யாமெல்லாந் தமிழுணர்ந்து பழியொழிந்து
நேர்மை சான்ருேம்
நின்னாலே நீசிறந்தாய் நெறிச்சாமி நாதநின்சீர்
நீடு வாழி.

15 செந்தமிழால் விளைந்தபொருள் செந்தமிழ்க்கே சேர்ப்பித்த
செல்வன் மும்மைச்
செந்தமிழால் விளைந்தவுடல் செந்தமிழ்க்கே சேர்ப்பித்த
செம்மை யாளன்
செந்தமிழால் விளைந்தவுயிர் செந்தமிழ்க்கே சேர்ப்பித்த
தீரன் கன்னிச்
செந்தமிழே தன்னுருவாத் திகழ்சாமி நாதனடி
சென்னி வைப்பாம்.

மாவை, தெல்லிப்பழை,
இலங்கை.

இங்ஙனம்,
சு. நவநீதகிருஷ்ணபாரதி.

ஸ்ரீ:

இ ரா ம செ ய ம்*

[இராமாயணத்திருப்புகழ்]

உத்தரகாதை

(௩௨0-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இலகிய தவள கதம்ப கோமள
        ம்ருகமத பரிமள மண்டு காவண
        மிடுநிழல் பயினறு மஞ்சு போல்விரி—   தருசோலை
    இதுவென வறலென வந்த காரமொர்
        வடிவுகொள் வகையென விந்த்ர நீலமும்
        ரதிபதி படையொடி ருந்த சூழலு   மெனவீறிப்

பொலிவொடு நெடுகி வடிந்து கோதியொர்
        பிடர்மிசை யினிது படிந்த பாளைகள்
        புதுமணம் விசிறு மலங்கல் வார்குழன்   மடவார்தம்
    புளகித கடின சுகந்த சீதள
        முகுளித யுகள வனந்த பூஷண
        புணர்முலை மலையை மறந்து னீரடி   பணியேனோ

வலிமிசை கொடுவரு பெண்கள் யாரையு
        முறைமுறை தொழில்செயு மென்ற போதினின்
        மகபதி நெறியல வென்று வீடணன்   முதல்வாகேள்
        ....
    மதுவெனு நிசிசரன் வந்தெ மூரிடை
        யெமையரு ளணையொடு வந்த மாதினை
        மணமுற வலியொடு கொண்டு போயின   னவனோடே

---

* இது, இச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையிலுள்ள ஒரே எட்டுப் பிரதியிலுள்ளவாறு வெளியிடப்பெறுகிறது. எட்டில் இடையிடையே சிதைந்த பகுதி புள்ளியிடப்பெற்றுளது.

சிலபல பொருது முறிந்து சேனையும்
வெருவின கருணனு றங்கி ஞனம
சிறுவனு மகமிசை தங்கி ஞனிகல் வினையேனும்
செறிபுனன் முழுகி யறிந்தி லேனென
வொருபது தலையன் வெகுண்டு ளானிது
திடமென மலையன் விளம்ப வேமகிழ் பெருமாளே. ()

அம்பொ னணிகுடை தம்பி யிடவிரு
தம்பி யரும்விரி கின்ற கவரிகொ
டங்கு முறைசெய வென்றி மருவிய வுடைவாள்கொண்
டங்க தனுமரு கின்க ணிலைபெற
வெங்க ளனுமனு மந்த வடியிணை
யன்பி னினிதுசு மந்து பணிவுற மலர்தூவி
யும்பர் தொழவிரி தும்பு ருவின்வகை
யின்சொ லினியவி தங்கொ ளொலிசெய
வுந்தி யயன்மகன் வந்து மணிமுடி கவியாநின்
றன்ற னருகுற முந்து சனகியொ
டந்த நகரிலி ருந்த வழகினை
யொன்ற நினைதொறு மென்றன் விழிபுன லொழியாதே

வெம்பு நிருதன்வெ குண்டு மதுவுயி
ருண்ப னெனமு னெழுந்து படைவர
விஞ்சு பயமொடு கும்ப நிசியெனு மொருதா……
மிண்டு மவணிகர் சண்ட னுயிரைவ
ழங்கு கெனவவன் வென்றி மதுவினை
யன்று பரிவுட?……… னுறவாகி
நம்பு மதுவொடு முந்தி யளகைவ
ளைந்து கொளவொர ரம்பை யிரவிடை
நந்தி……… மைந்த னலமுற வருவானை
நஞ்ச மெனநல முண்டு விடவவள்
சென்ற பிறகுவி ளைந்த கதையுள
நம்ப வெனவொரு கும்ப முனிமகிழ் பெருமாளே. ()

பந்த றைந்துவிளை யாடு வார்செறி
மென்க ழங்குதனை யாடு வார்மிகு
பண்பொ ருந்துகவி பாடு வார்விரி யறலோதிப்
பந்தி துன்றமலர் சூடு வார்தனி
நின்ற ரங்கினட மாடு வார்கள
பம்பொ ருந்துபுன லாடு வார்செழு முலைபூணச்

சிந்தை கொண்டமணி தேடு வாரது
கண்டு நொந்தவிடர் பேணு வார்நுதல்
சிந்து ரங்கொடெழில் பூணு வார்பல மடவாருந்
தென்ற னின்றுபுடை யாடு மேடையு
மொன்றி லொன்றுகுறை யாமல் வாழ்பவர்
செஞ்சொல் கொண்டுனடி தாழு வாரல துளராமோ

வந்த ரம்பைவர லாறு கூறலும்
வெம்பி நின்றுநள கூப ரேசுரன்
வஞ்ச னந்தநிரு தேசன் யாதொரு மடவாரை
வம்பில் வந்துதொடு மாகி லாருயிர்
மங்க வென்றவிடு சாப மேயிட
வம்ப னன்றுமுதல் வேறு மாதரை யவனுக

முந்தி யென்றுநினை யான தாகையி
னங்கை யெங்கள்சன கேசன் மாதையு
மொய்ம்ப னஞ்சியணு காத காரண மதுவேகாண்
முன்பு ரிந்தகதை வேறு கேளென
விஞ்சு கும்பமுனி கூற வேமகிழ்
முண்ட கங்கண்முக நாபி யாகிய பெருமாளே. (35)

பார தூதுமணி மாலைநற பநற?
கோவை யேசல் ......றைசோபிணைத......
தாதி கேசமட லூர்த னக்கெழுவ தெனவோதல்
பாவை மேவுகள நாலு பத்துவகை
சீரு லாவெளடி யேக லித்துறைகள்
பாடி யாடிநிதி யாள ரைப்பரவி யுழலாதே

வார வார.........சீத ளப்ரபல
கோல காலவெகு மாமு கப்புனித
மான வானநதி யோடு நற்றுளவு பரியாநின்
ஞுடல் மேவுமிரு பாத முற்றபுக
ழாதி யோதியது வேநி னைத்துருக
வாசி லாதவர நீய ளிப்பதுவு மொருநாளே

சூரி யாரிகர தூட ணத்திரிசி
ராப சாசன்மதி கோபன் மிக்ககணர்
தூம கேதுவினை யான ளித்தவர்கள் சூரவோர்கள்
சூழ வேகியம ராப திக்குள்வர
மாசு மாலிபட வேவ சுக்கள்பொரு
சூழன் மீதுமுனி நாதர் சக்ரிமகன் விழமேவி

வீர மேவுநிரு தேச னைப்பொருது
தேவ ராசன்விரு தேபி டித்துவர
மேக நாதனெதிர் காண விற்கடுகி யொருபாசம்
வீசு போதுமக வான கப்படலு
மோடி ஞர்களிமை யோரெ னப்பொதிய
வேத ஞேதமுடி தான சைத்துமகிழ் பெருமாளே. ()

நீகு லாவிய ணிந்தது பொற்றுகில்
யாமெ லாமணி கின்றது மித்தழை
நீல நீபுனை யுந்தொடை யிக்குர வணிவோம்யாம்
நீயி ராசகு லந்தனி லுற்றவ
னீன மாமற மெங்கள்கு லத்திய
னீயெ மோடுக லந்திடன் மத்திம மெனவோதுந்

தோகை யாரிழி வின்கிள வித்துறை
யாதி கோவை யடங்கவு ரைத்ததி
தூர மேகிமு சுண்டர்ப்ரி யப்பட வெதிர்பாடிச்
சோக மாகியு மன்றுப டைத்திடு
நீடு பாவம கன்றிட நட்பொடு
தூய பாதமி றைஞ்சியு னைத்தொழ வருள்வாயே

மேக நாதனை யிந்த்ர செயித்தென
நாம மோதி வரங்கள ளித்தழன்
மீதி லேவரு துங்கர தத்திடை யுளையானல்
வீறு சாவிலை யென்றுமு தற்புரி
யாக மானநி கும்பலை முற்றிடில்
வேக மாகநி னைந்தது முற்றுக வெனவோதி

மாக நாதனி ருஞ்சிறை புக்கது
போது மேயென நின்றுது தித்தயன்
வாழி கூறவ வன்சிறை விட்டது மனநாணி
வானு ளோர்பதி யும்பதி புக்கனன்
ராம கேளெனும் வென்றிய கத்திய
மாத வேசனை யன்றுப்ரி யப்படு பெருமாளே. (37)

கோத்த வாளி போற்குழை முடுகுவ
வாய்த்த காம சாத்திர மொழிகுவ
கோட்டி யான வியாத்திகள் பயிலுவ முனிவோர்தங்
கூட்ட மோட வோட்டுவ வெகுவிளை
யாட்டி னோடு சேட்டைகள் முயலுவ
கூற்று நாண நாட்டுயிர் பருகுவ வநியாய

நேத்ர மாதர் காற்கிடை தனில்விழு
வேட்கை யான சூட்சமும் விரகமும்
நீட்சி யான தூர்த்தனை யசடனை யிருபோது
நீற்று நாதர் பூத்தலை யுறைபவர்
பார்க்கொ ணாத தாட்டொழ வருள்செய்து
நீக்கொ ணாத பாக்கிய முதவுவ தொருநாளே

காத்த வீரி யார்ச்சுன னருமதை
யாற்றின் மாதர் கூட்டம துடன்மகிழ்
காட்சி மேவ ராக்கதர் குலபதி யதுகாணுக்
காற்றின் வேக மாய்ப்பொர வவனிவ
னாற்றல் போக நீட்டிய புயவலி
காட்டு போது தோற்றன னவனையொர் சிறையூடே

சாற்றி ராசன் வீழ்த்தின னிளையவர்
கேட்டு வேத மூர்த்திமுன் விரைவொடு
சாற்ற வோடி நாற்றலை மலர்முனி சிறைமீளத்
தாட்சி யோடு போய்ப்பதி மருவினன்
வேட்டை போன போக்கிது வெனமிகு
தாக்கி னேடு மாக்குட முனிபுகழ் பெருமாளே. (38)

இட்டந்தனில் வாழ்கையு நீர்க்கொடு
புட்பங்கொடு னீரடி போற்றலு
மெற்கென்றிர வாமையு மேற்றமு மடவாரா
லெற்றுண்டுது ராகத மூத்திர
கட்டம்படு வாசலை நோக்குறு
மித்தொந்தமு ரூதபி ராத்தியு மொருகாலு

முட்டன்றியெ நாளுமி ராப்பகல்
இட்டுண்டிடு நீதிந டாத்தலு
முற்றும்பெறு தூயக டாட்சமு முடையோனாய்
மொய்த்தொண்டர்ப ராவுறு மாப்பத
நற்பங்கய மேபெறு பேற்றினை
முற்றொண்டர்மு னேவழி காட்டுவ தொருநாளே

கட்டுண்டவி ராவணன் மேற்படு
கிட்கிந்தைபு காநனி போய்க்கவி
கத்தன்சிறு பூசைதென் மாக்கடன் முயல்வானைக்
கைக்கொண்டிடு போதுதன் வாற்சுரு
ளைக்கொண்டடர் தானவன் வாய்ப்புனல்
கக்கும்படி தோள்களை வீக்கின னதனோடே

வட்டங்கொடு தாவினன் மேற்கட
னக்கன்சிவன் மேன்மலர் சாத்தினன்
மற்றுங்குறி யாவட பாற்கடல் குணவேலை
மட்டும்பல பூசைசெ யாப்பதி
யிற்சென்றனன் வாலியெ னுத்தமி
வர்க்கந்தரு மாமுனி போற்றிய பெருமாளே. (39)

மூலவ ராங்கனை சிலகு ணும்புதி
மூதறி வாண்டவ ளயனார்தம்
மோகன வேந்திழை மாதவ ளாம்புய
மோனிப ராங்குசை கவிவாணி

பாலைப லாண்டுமென் னுவக லாஞ்சனை
பார்மக டோய்ந்தவ ளபிராமை
.....பாரதி யீந்திடு வாய்மைகொ டங்கிரு
பாதமும் யான்புகழ் புரிவேனே

வாலிடை தூங்கிய ராவணர் வேண்டலும்
வாலியை யீண்டிய ....வொருதாரை
மாக்ருபை சூர்ந்தபி னேயவ னீண்டதோர்
வால்விட வீழ்ந்தன னசுரேசன்

மேலொரு பாங்கன்மெய் தானென வான்கனல்
மேவிய சான்றென வுறவானன்
வீறிது காண்பெரு மாளென மாண்குட
வேதியர் தாம்புகழ் பெருமாளே. (40)

பலதலை யானுயி ருண்ட திறமது சேலகமென்று
பகருமதோவவன் மங்கு சிறைவீழப்
படைபொரு ராசனை முந்து மிருபுய மாயிர மன்று
பரசுகொ டேயரி கின்ற திறலோனைச்

சிலையது கோலிமு னிந்து தவமது வாரிய பின்பு
செயசெய ராகவ வென்று மழுவாளி
திசைபழு தாகியொ டுங்கி விரதியெ னுவுயிர் கொண்டு
செலவிடு வீரநி னைந்து புகழ்வேனே

வுலகினில் வாலி திறங்கள் பகருமதோவிடு வென்றி
யுயரனு மானையொ ழிந்து ....திறலோர்யார்
ஒலிகட ருவினன் வஞ்ச மகளுடல் பீறினன் மங்கை
யுயிரது பேணினன் வெந்த நகர்வீரர்

குலமது றூறின னெம்பி கிளேயொடு வாழம ருந்து
குளிர்வரை யோடு பிடுங்கி வருநீதிக்

குணநிதி யாவன வன்றன் வலியறி யாவகை யென்கொல்
குறுமுனி யேயுரை யென்ற பெருமாளே. (41)

தூசுகள் பெற்றில ரிடையர் தத்தையர்
தூசுகள் பெற்றன ளொரும டக்கொடி
சூரிய புத்ரனை யுறவு பற்றினை ....

சூரிய புத்ரனை யுயிர்ப றித்தனை
சூழ்கட லைச்செலு மிகைய டக்கினை
சூழ...................கிரக மதனுலே

யீசனை முற்றம ரிடைது றத்தினை
யீசனை யுற்றனை யொருபு றத்தினி
லேழுலகத்...............வித்தைக ளறிவார்யார்

யானுனை யெப்படி யினிநி னைப்பது
யானுனை யெப்படி தொழுது நிற்பது
யானுனை யெப்படி யினிவ ழிப்பட வருள்வாயே

வாசவன் வச்சிர மநுவி னிற்பட
வோய்வுறு புத்திர னுடலி னைக்கொடு
வாயுவொ ளித்தன னுலகு கெட்டது நெடுவானோர்

வாழ்பிர மற்கிது முறைபி டச்செக
சூனிய மிப்படி வருகை கற்பல
மாருத வுத்தம பிழைபொ றுத்திடுன் மகனுவி

நாசம றப்பெறு கெனவெ ழுப்பின
னீசர்மு தற்கட வுளர்ப டைக்கல
நாடுத லற்றிட வாம ளித்தன..............

......................................விக்ரமம்
வீரர்செ ருக்கினில் விளேயு மக்கதை
ஞானவ கத்திய னுரைசெ யத்தெருள் பெருமாளே. ()

ஓரா வுச்சியு றுத்தினை யோரா வுச்சிந டித்தனை
ஓரா வத்தைய டர்த்தனை யணையாக
ஓரா விற்றுயில் பற்றினை யோரா வைக்கிரி சுற்றினை
ஓரா வைப்பிழை பட்டிட வொருதேரைப்

பாரில முத்தினை யிப்படி மாயம டிக்குமு னக்குள
பான்மைக ளைத்தெரி யக்கொடு ......ன்மானம்
பாடிந டித்துரு கித்தொழு சீலகு ணத்தைநி னைத்திரு
பாதமெ னுச்சியில் வைப்பது மொருநாளே

மாருதி மெத்துசெ ருக்கினில் வேதவ சிட்டர்த வத்தினை
வாரிய ழித்தனன் மெய்த்தவன் முனிவாகி
வாயுவ ளித்திடு புத்திர னீயுன்மி டுக்கறி யக்கட
வாயலை நற்றெழில் பற்றுதி யெனலோடும்

வீரனு மக்ரமம் விட்டனன் வாலிது ரத்திய சுக்ரிவன்
வேணுமெ னத்துணை யுற்றனன் ரவிதோர்முன்
மேவிய வர்க்கரி டத்துவி யாகர ணப்பொருள் கற்றனன்
வீறிதெ னச்சொல கத்தியர் பெருமாளே. (43)

நெருக்குலக மீது பிரமர் சிருட்டிவகை யீது வினவி
நினைத்தவுயி ரீது மரண வகையீது
நிறுத்துநர கீது குலவு சுவர்க்கதல மீது சுருதி
நிலைப்பொருள்க ளீது நமது வடிவீதென்

றுருக்கமொடு கூறி முழுது மருச்சுனன்வி டாது தெளிய
வுணர்த்தியது போல வெனது விழிகாண
வுரைத்துனடி யூடு தெரிய வனைத்தும்வெளி யாகவுதவி
யுனக்கடிமை யாக வருள்செய் திடுவாயே

அரக்கர்வர லாறு மனுமன் மிடுக்குளதும் யாவு முரைசெய்
யகத்தியன்முன் னோர்க ளகல விடைதாரா
வடுத்ததொரு போது சனகன் வரத்தொழுது மீளு மவனு
மருத்தியொடு வாய்மை மருவ வதுபாராக்

குரக்கரசன் வாயு குமர னரக்கர்பதி யேக விடைகள்
கொடுத்தருளி ராச நெறியி லுறைநாளிற்
குருத்தகுவி மான ரதமு முறைப்படிகு பேர னருகு
குறிப்பினுடனேக வருள்செய் பெருமாளே. (44)

நாயகமொ ருத்தன் மூலமுதல் பேரொளிசு டர்ப்ர காசவெளி
ஞானநிலை யெட்டொ ணுவடிவு நிறைகோல
ஞானமிழி வற்ற தோர்பிரம மாருயிர்ம றுப்ப டாததுமெய்
நானெனது மற்ற வேதநின ததிரூப

மாயதுமி ருக்க மூவுருவி னீடுலகி யற்றி நாளும்விளை
யாடுவையு னைப்ப ராவவினி வசமாமோ
வாதரவு பற்றி நானுமொரு நேரிதுது திக்கி றேனடிமை
யாமெனநி னைப்பை யோகருணை யறியேனே

நீயினிய ளித்த பாரின்மிசை நோவுமிலை யத்தி ராதிகளி
னீடுமர ணப்ர மாதமிலை முதியோரு
நீலநமன் வெற்றி காணவிலை யாயசிறு மக்கள் சாவுமிலை
நேரில்புலி யைப்புல் வாய்மருவு மிதமாயே

வாயு......மிக்க தோர்மலடு பேடிவித வைப்பெ ணுமமிலை
மாமகளிர் புத்ர னேபெறுவர் நினையேபோல்
வாழரசு முற்செய் தாருமிலை காணெனவு ரைத்து நீள்பரதன்
வாழியெனும் வித்த காபெரிய பெருமாளே. (45)

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

ஒரு சிறப்புப் பட்டம்

நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபை வித்யா விஷய ஆலோசனைஸபைகளின் உறுப்பினருள் ஒருவரும் தமிழ் வளர்ச்சியொன்றே குறிக்கொண்டு உழைத்துவருபவரும் ஆன திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்களைத் தமிழ் மக்கள் நன்கறிவர். இவர்களுக்கு நம் அரசாங்கத்தார், இவ்வாண்டு மேன்மைதங்கிய நம் மன்னர்பெருமான் பிறந்தநாளில் வழங்கும் சிறப்பாக மஹாமஹோபாத்யாயர் என்ற அரும்பெறற் பட்டஞ் சூட்டிக் கௌரவித்திருப்பது தெரிந்து மிக மகிழ்வடைகிறோம்.

செட்டியாரவர்கள் கற்றுத்துறைபோகிய நற்றமிழ்ப்புலவர்; அடைவொடுதெளிந்த வடமொழியுணர்வும் உடையவர்; தமிழ்ப் புலவர் பலரொடும் அளவளாயொழுகித் தம் செல்வாக்கால் அவர்க்கு உத்யோக முதலியவை கிடைக்கச்செய்து அவரை ஆதரித்துவருபவர்; சங்கநூல்களும் சமயசாத்திரங்களும்தேவார திருவாசகங்களும் பிற்காலநூல்களுமாகியவற்றுள் அமைந்த நயமெலாம் யாவரும் இனிதுணர விரிவுரைவழங்கும் வீறுடையவர்; கற்பவர் மகிழ்ந்து நயந்துஉளங்கொள்ளுமாறு அரியநூற்பொருள்களைத்தெளியவுரைக்கும் போதனாசக்தியும் வாய்ந்தவர்; ஆரியத்துள்ள சீரியநூல்கள் பலவற்றை, அவற்றின் சிறந்த கருத்துக்களும் நிறைந்தபொருள்களும் பிழையாது ஒருங்கமைந்த செவ்விய தமிழ்ச்செய்யுள்-நூல்களாகவும் வசனநூல்களாகவும் ஆக்கித்தந்தவர்; இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்தும் திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்தும் பிற தமிழ்க்கழகங்களிலும் உறுப்பினராயிருந்து தமிழ்வளர்ச்சிக் காவனபுரிந்துவருபவர்; ஆங்கிலப்பேரறிஞரே வகித்தற்குரியதாகவுள்ள பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர்பதவியை வகித்துத் திறம்பட நடத்தவல்ல தமிழ்ப்புலவர் இற்றைஞான்றும் உளர் என்னும்

உண்மையை உலகம் அறியுமாறு, அண்ணாமலை பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவர்பதவியில் ஓராண்டுக்குமேலும் அமர்ந்திருந்து உயர்ந்த பணியாற்றி நிறைந்த புகழுற்றவர்; தனவணிகர் நாட்டுள்ளும் பிறஇடங்களிலும் ஆங்காங்குப் பலபல தமிழ்க்கழகங்கள் தத்தமக்கியன்றவாறு தமிழ்ப்பணி புரிந்துவரும்படி தோற்றுவித்தவர். இவர் மொழிபெயர்த்துதவிய நூல்களுள், சுக்கிரநீதி, மிருச்சகடிகம் (மண்ணியல் சிறுதேர்), உதயனசரிதம், சுலோசனை முதலியவை ஒரு தனிச்சிறப்புவாய்ந்தவை. இவர் மொழிபெயர்த்தவற்றுள் உரையும் பாடலுமான நூல்கள் பல இனி வெளிவரவேண்டியனவாய் உள்ளன. இத்தகைப் பெருமைவாய்ந்த செட்டியாரவர்கள் தகுதியறிந்து கௌரவித்த அரசாங்கத்தார் பாராட்டற்குரியராவர்.

செட்டியாரவர்கள் அரோகதிடகாத்திரராயிருந்து, தாம் இயற்றிவைத்துள்ள நூல்களையெல்லாம் அச்சிட்டுவெளியிட்டும், அவ்வப்போது வேண்டியநூல்களை இயற்றியளித்தும் தமிழர்க்கு நல்விருந்தளித்து நீடுவாழும்வண்ணம் எல்லாம்வல்ல இறைவன் அவர்களுக்கு நீண்ட வாழ்நாளும் நிறைந்த செல்வமும் மேலும் மேலும் உயர்ந்த பட்டமும் பதவியும் பிறநலங்களும் வழங்கியருள்க.

பத்திராசிரியர்.

மதிப்புரை

கலாநிதி:—இது, யாழ்ப்பாணத்து ஆரியதிராவிடபாஷாபி விருத்திசங்கத்தினின்று கலையாக்கங்கருதி மூன்றுமாதத்துக்கு ஒருமுறை வெளியிடப்பெறும் ஒரு தமிழ்ப்பத்திரிகையாகும். இதன் முதலிரண்டு கதிர்கள் வரப்பெற்றோம். ஆங்கிலமொழி வல்லுநரும் தமிழறிஞரும் ஆரியமொழிவல்லுநரும் இருமொழித் தேர்ச்சியுடையாரும் ஆகிய புலவர் பலர் கூட்டுமுறையில் ஆசிரியர்க ளாயிருந்து நடத்திவரும் இதற்குத் தலைமையாசிரியர் சுவாமி உருத் திரகோடீசுவரராவர். பண்டைத் தண்டமிழ்நூனயங்களும் உரை நயங்களும் சரித்திர ஆராய்ச்சிகளும், இசை சிற்பம் முதலிய கலை வகைக்குறிப்புக்களும் பிறமொழிநூல்களில் அரியவற்றின் மொழி பெயர்ப்பும் பாராட்டுரை மதிப்புரைகளும் பிறவும் இதனுள் தக்க அறிஞர்களால் இனியவாக விரித்து விளக்கி வரையப்பட்டுள்ளன. அவற்றுள் சுவாமி விபுலாநந்தரவர்கள் எழுதியுதவிய 'பரதசாத்தி ரம்', 'பழந்தமிழரின் யாழ்க்கருவிகள்' என்னும் பொருளுரைகளும், வித்வான். ராவ்ஸாஹிப். மு. இராகவையங்காரவர்கள் எழுதிய 'சாசனத்தமிழ்' என்னும் பொருளுரையும், வியாகரணமகோபாத் யாயர் வை. இராமசாமிசர்மா அவர்கள் எழுதிய 'பரிமேலழகருரை மாண்பு' என்னும் பொருளுரையும், பிறவும் தமிழர் யாவரும் நன்கு படித்துப் பயனடைதற்குரியன; மேலும் பிறரும் அம்முறையில் ஆராய்ந்து, தமிழ்ச்சுவை நுகரும்படி தூண்டுவன. இன்னோரன்ன சிறந்தபொருளுரைகளுடன்கூடிய கலாநிதியின்வரவு நல்வரவாகுக. ஆரியமும் தமிழுமாகிய இவ்விருமொழிகளையும் ஒருங்குவளர்க்கும் கருத்துடைய ஆரிய திராவிடபாஷாபிவிருத்திசங்கத்தாராதரவில் இது மேலும்மேலும் சிறந்து பலகலைவிருந்தும் உலகினர்க்களித்து நீடுநிலவும்வண்ணம் தமிழர் ஆதரவுதருக; தமிழ்த்தெய்வம் அருள் புரிக; இதன் வருடச்சந்தா ரூபா இரண்டு. தனிப்பிரதி—எட்டணா. வேண்டுவோர் இதன் மானேஜரும் யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திசங்கக்காரியதரிசியுமாகிய ஸ்ரீ. J. T. சதாசிவையை ரவர்களிடம் பெறலாம்.

புலவருலகம்:—இது மதுரையிலிருந்து வெளிவரும் ஒரு சிறந்த திங்கள் வெளியீடு. 'திருக்குறட்குமரேசவெண்பா' முதலிய பல நூல்களையியற்றித்தந்த திரு. கவிராஜபண்டித ஜேகவீரபாண்டியனுர் இதன் ஆசிரியராவர். இதன் இரண்டாவது தொகுதியின் முதற்பகுதி வந்தது. அதில், முதற்றொகுதியின் தொடர்ச்சியான கம்பன்கலைநிலை என்பதனுள் தசரதன்தன்மை என்னும் பொருள் பற்றி ஆசிரியர் கம்பர்கவியுலகிற்புக்குப் பலபல சுவையும் நயமும் விளங்கவரைந்திருப்பது, அவர்க்குக் கம்பர்காப்பியத்துள்ளபயிற்சி மிகுதியை விளக்கும். பலகலையறிவும்வாய்ந்த பலர் நெடுநாள் முயன்று முற்றுவிக்கத்தக்க இப்பணியை மேற்கொண்ட ஆசிரியர்க்குத் தமிழ்மக்கள் போதிய ஆதரவுதந்து இது மேலும் சிறக்கவுதவுக. இதன் வருடச்சந்தா ரூ. 4. அழகாகப் பைண்டு செய்த இதன் முதற்றொகுதி ரூ. 4–8–0. கிடைக்குமிடம்:—திருவள்ளுவர் நிலையம், 127 மேலமாசிவீதி, மதுரை.

[செல்வம்:—இயற்றியவர் ஸ்ரீ. க. சந்தானம் M. A. அவர்கள். விலை ரூபா ஒன்று. கிடைக்குமிடம்:-சக்திகாரியாலயம், வடக்குவெளிவீதி, மதுரை.]

செல்வம், நாட்டுமக்களனைவரும் நல்வாழ்வடைதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது. 'எல்லாம் பொருளிற் பிறந்துவிடும்' என்பது நான்மணிக்கடிகை. "அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து-தீதின்றி வந்த பொருள்" என்பது திருக்குறள். செல்வத்தின் வகைகளும் அதனை ஆக்கிக்கொள்ளுமாறும் அது சமூகத்துக்குப் பயன்படுமாறும் ஆகியவற்றை அபேதவாதநோக்கொடு பலதலைப்பின்கீழ் ஆராய்ந்து விரித்துவிளக்கித் தேசத்தொண்டரும் மத்யசட்டசபையங்கத்தினருமாகிய திரு. க. சந்தானம் என்பவர் தமிழ்மக்களுக்கு இப்புத்தகவாயிலாக வழங்கியுள்ளார். இவர் உரைநடையியல்பு நன்கறிந்த தமிழ்மக்கட்கு அதுபற்றி இங்கு விரிப்பது மிகையாகும். இதனைப் பல்லாற்றானும் வனப்பமைய அச்சிட்டுதவிய சக்திகாரியாலயத்தார் பாராட்டற்குரியர்.

அபேதவாதம்:—இது; திரு: சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரிய ரவர்கள், தம் சிறைவாசகாலத்தில் உடனிருந்த அன்பர் அறியுமாறு பொதுவுடைமை என்பதுபற்றிச் செய்த பிரசங்கங்கள் பின் ஆங்கிலத்திற் புத்தகமாக வெளிவந்ததனை, அதன் நயமெல்லாம் அமையுமாறு எளிய தமிழ்வசனமாக மொழிபெயர்த்து அழகாக அச்சிடப்பெற்ற புத்தகமாகும். இதை மொழிபெயர்த்துதவியவர் தி. ஜ. ர. என்ற குறியீட்டெழுத்துக்களால் வழங்கப்படுபவராவர். பிரசுரித்தவர் சக்திகாரியாலயத்தார். இதனுள், அபேதவாத தத்துவமும், அதன் இலக்கணமும், அதை மேற்கொண்டொழுகுமாறும் அதனால் விளையும் பயன்களும் பிறவும் ஏற்ற உதாரணங்களால் விளக்கப்பட்டுள்ளன. இதன்விலை அணு ஆறு. கிடைக்குமிடம்:— சக்திகாரியாலயம், வடக்குவெளிவீதி, மதுரை.

[அரசியல் ஞாபகங்கள்:—எழுதியவர், ஹிந்துஸ்தான் என்னும் பத்திரிகையின் உதவியாசிரியரான திரு. கி. சடகோபன் என்பவர். பதிப்பித்தோர், சக்திகாரியாலயத்தார். விலை ரூபா. ஒன்று. கிடைக்குமிடம்:—சக்திகாரியாலயம், வடக்குவெளிவீதி, மதுரை.]

தேசத்தொண்டரும் உலகியலறிவும் அரசியலறிவும் அநுபவமும் உடையவருமான திரு. கி. சடகோபன் என்பவரால், நாட்டுப் பணியிலும் காங்கிரஸ் இயக்கத்திலும் ஈடுபட்ட பல பெரியார்களிடையே நிகழ்ந்த உருக்கமான சம்பவங்களும் நகைச்சுவைவிளைக்கும் செய்திகளும் முதலியவற்றையெல்லாம் வாலாற்றுமுறையில் தொகுத்துச் சுவைவிரவிய தமிழுரைநடையாக எழுதப்பட்ட இது, இந்தியக் காங்கிரஸ்மஹாஸபையின் சரித்திரமாகவும் படிப்போர்க்கு இன்பம் விளைப்பதாகவும் இருக்கிறது. காலத்துக்கேற்றவாறு இன்னோரன்ன பல புத்தகங்களைத் தக்க அறிஞர்களைக் கொண்டு எழுதுவித்து அழகாக அச்சிட்டு வெளியிட்டுவரும் சக்திகாரியாலயத்தார் முயற்சி மேலும்மேலும் சிறந்து தமிழ்மக்கட்கு நலமுதவுக.

[சூரியநமஸ்காரம்:—எழுதியவர்:-டி. வி. திருவேதி என்பவர். பதிப்பித்த
வர்: சக்திகாரியாலயத்தார். விலை ரூபா ஒன்று. கிடைக்குமிடம்: சக்திகாரி
யாலயம், வடக்குவெளிவீதி, மதுரை.]

மானிடயாக்கை அரிதிற் கிடைத்தது. அதனால் விளையும்
நலங்கள் பல. ஊறின்றி நீடுநிற்குமாறு அதனைப் பேணிக்கொள்
வது ஒவ்வொருவருக்கும் உரிய கடமையாகும். அதற்குரிய பல
வழிகளிற் சூரியநமஸ்காரம் சிறந்தது. அது, உடலினையும் உள்ளத்
தினையும் பண்படுத்துவது; உறுதியும் அழகும் உதவுவது; மந்தி
ரத்தோடு கூடியவழி வழிபாட்டுவகையுள் ஒன்றுவது; அஃதில்வழி
உடற்பயிற்சியாயமைவது; வீண்செலவும் வருத்தமும் இன்றி
அவரவர் தத்தமக்கு இயன்றவாறு பயின்று நலமடையத்தக்கதா
யும், முந்தையோர்கண்டொழுகிய முறையாயும், ஒழுக்கநெறிக்
கேலாதனவும் தீங்குபயப்பனவுமான பல கொடிய பழக்கங்களை
விடத் தூண்டுவதாயும் உள்ளது. இத்தகைச்சிறப்புவாய்ந்த இதன்
வகையும் முறையும் மந்திரங்களும் ஆசனங்களும் நியமங்களும்
யோகாசனங்களும் ஆகியவற்றை யாவரும் எளிதிலுணர்ந்து
பயின்று பயனடையும்படி பலபடங்களால் விளக்கித் திரு. டி. வி.
திருமூர்த்தியவர்கள் தெளிவான தமிழுரைநடையாக இப்புத்த
கத்தை எழுதியுதவியுள்ளார்கள். இவர்களுடைய தொன்னெறி
பேணும் விருப்பும் பரோபகாரசிந்தையும் பாராட்டத்தகும். இப்
பதிப்பினுள், தமிழ்மரபொடு பொருந்தாதனவாகவும் வழக்கு
வழிப்படாதனவாகவும் பிழைகளாகவும் காணப்படும் சிலவும்
அடுத்த பதிப்பில் திருத்தம்பெறுமென்று நம்புகிறோம்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	*தமிழரும் ஆந்திரும்			
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	௸ (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	சந்திரகுப்தன்	0	6	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ. 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு ~~மேற்பட்டும்~~ வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.